இந்தியாவின் ஊழிய எழுப்புதலுக்கு ஒரு புதிய பார்வை

(ஒரு கலந்துரையாடல்)

ஆசிரியர்

* Dr. M. சுந்தர் இயேசுவடியான்
* இந்தியன் அனாரிய சமாஜ் ஊழியங்கள்

பதிப்பாசிரியர்

எஸ். தாயப்பன்

"யூதருக்கு யூதனைப்போலவும்,...

...எல்லாருக்கும் எல்லாமானேன்."

- 1 கொரி. 9:20, 22

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

இந்திய ஊழிய எழுப்புதலுக்கு ஒரு புதிய பார்வை

(ஒரு கலந்துரையாடல்)

டாக்டர் M. சுந்தர் இயேசுவடியான்
இந்திய அனாரிய சமாஜ் ஊழியங்கள் (IAS Ministries)

பதிப்பாசிரியர்
எஸ்.தாயப்பன்

'யூதனுக்கு யூதனைப் போலவும்...
எப்படியாவது ஒரு சிலராவது இரட்சிக்கும்படிக்கு
எல்லோருக்கும் எல்லாமும் ஆனேன்' - I கொரி 9:20-23

நன்கொடை - ரூ.5/-

இந்திய ஊழிய எழுப்புதலுக்கு ஒரு புதிய பார்வை - ஜூன் 2014 - 5000 பிரதிகள்

இந்த நூல்கள் மற்றும் விசிடி கிடைக்கும் முகவரி:

எஸ்.ஜாடப்பன்
12, ஜி.டி. நாயுடு தெரு, பாலாஜி அவென்யூ-1
சேலையூர் போஸ்ட், சென்னை - 600 073.
தொலைபேசி: 044 - 2234526, மின்அஞ்சல்: sakthiprabba@yahoo.com

நூலை அனுப்ப சில விதிகள்

ஒவ்வொரு நூலுக்கும், விசிடிக்கும் நன்கொடை ரூ.10/- + தபால் செலவு ரூ.1

MO, DD அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். உங்கள் முகவரியை MO பாரத்தின் அடியில் உள்ள தகவல் பகுதியில் தெளிவாக, பின்கோடு நம்பருடன் எழுதி அனுப்புங்கள். உங்கள் தொலைபேசி, செல்போன் எண்களை கண்டிப்பாக எழுதவும். செக் பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது. MO, DD பெற்றுக் கொண்ட பிறகே நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

விசிடி அனுப்ப தபால் செலவு மட்டும்:

1 முதல் 15 விசிடி அனுப்ப ரூ.20/-
16 முதல் 25 விசிடி அனுப்ப ரூ.35/-

100 விசிடிக்கு மேல் மற்றும் அதிக புத்தகம் வேண்டுமானால், அவைகள் கே.பி.என். பார்சல் சர்வீஸ் மூலம் வெளியூர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

நேரில் வர:

நேரில் நூல்களைப் பெற்றுக் கொள்ள விரும்புகிறவர்கள் கிழக்கு தாம்பரம் கிறிஸ்டியன் காலேஜ் பஸ் ஸ்டாப்பிலிருந்து வேளச்சேரி மார்க்கமாக கிளம்பும் அனைத்து M சீரிஸ் மற்றும் வெள்ளை போர்டு பஸ்களில் ஏறி கேம்ப் ரோடுக்கு அடுத்த பஸ் ஸ்டாப்பான மஹாலட்சுமி நகரில் இறங்கவும். அல்லது ஷேர் ஆட்டோவில் ரூ.10/- கொடுத்தால் மஹாலட்சுமி நகர் பஸ் ஸ்டாப்பில் இறக்கி விடுவார்கள். இடதுபுறம் உள்ள சிட்லபாக்கம் மெயின் ரோட்டில் 1/2 கிலோ மீட்டர் உள்ளே வரவும். வலதுபுறம் K.K. மெடிக்கல் ஷாப்பை அடுத்துள்ள வலதுபுற ஜி.டி.நாயுடு தெருவில், இடதுபுறத்தில் இரண்டாவது வீடு.

ஒரு வேண்டுகோள்

உங்களுக்கு என்ன புத்தகம் எவ்வளவு வேண்டும் என MO படிவத்தில் அல்லது EMO வில் அல்லது கடிதத்தில் எழுதாத பட்சத்தில் எல்லா புத்தகங்களையும் நீங்கள் அனுப்பிய MO க்கு தகுந்தாற்போல் அனுப்ப வேண்டிய கட்டாயம் எங்களுக்கு ஏற்படுகிறது. இவைகளை தவிர்க்க உங்களுக்கு என்ன புத்தகம் தேவை என்று தெளிவாக எழுதி அனுப்புங்கள். உங்கள் டெலிபோன் / செல் நம்பர்களையும் தவறாமல் எழுதி அனுப்புங்கள். தேவை ஏற்படின் உங்களைத் தொடர்பு கொள்ள முடியும்.

ஆசிரியரின் பிற நூல்கள்:

1.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (தமிழ்)	3,20,000
2.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (கன்னடம்)	60,000
3.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (மலையாளம்)	40,000
4.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (தெலுங்கு)	10,000
5.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (ஹிந்தி)	10,000
6.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (ஒடிசா)	4,000
7.	**My Cry & Joyful New Life (English)**	45,000
8.	சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள்	1,05,000
9.	பாவத்தின் சம்பளம் நரகம்	85,000
10.	இயேசு கிறிஸ்து உங்களோடு பேசுகிறார்	40,000
11.	கிறிஸ்தவர்களின் 100 சந்தேகங்களுக்குப் பதில்	25,000
12.	என் ஊழியக்காரனே?	20,000
13.	இந்தியாவுக்கு இயேசு தேவை, ஏன்?	40,000
14.	சைவமும் வைணவமும் கிறிஸ்தவமே!	25,000
15.	நீங்களே எனக்கு சாட்சிகள்	10,000
16.	உண்மையான கடவுள் யார்?	15,000
17.	அற்புத சுகமளிக்கும் வைதீஸ்வரர் இயேசு	15,000
18.	இந்தியாவில் ஏன் சுவிசேஷம் முழுமையாகப் பரவவில்லை?	10,000
19.	கத்தோலிக்கர்களின் கனிவான கவனத்திற்கு - பாகம் 1	10,000
20.	கத்தோலிக்கர்களின் கனிவான கவனத்திற்கு - பாகம் 2	10,000
21.	நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் - பாகம் 1	20,000
22.	நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் - பாகம் 2	20,000
23.	கிறிஸ்துவை எதிர்ப்பதின் விளைவு?	10,000
24.	திருக்குறள் கூறும் இரட்சிப்பின் நற்செய்தி டாக்டர் கிறிஸ்டோபர்	10,000
25.	இந்தியா ஒரு கிறிஸ்தவ நாடு - டாக்டர் சுந்தர் ஏசுவடிவான்	3,000
26.	பாவப்பரிகாரியின் பங்கமில்லா அங்கங்கள் (பாகம் 1)	5,000
27.	பாவப்பரிகாரியின் பங்கமில்லா அங்கங்கள் (பாகம் 2)	5,000
28.	பரலோகம் செல்ல எளிதான வழி (சுவிசேஷத்தை அறிவிக்கும் முறை)	5,000
29.	நாலு வேதங்களின் நாயகர் இயேசு	5,000
30.	ஓர் அவசர அறைகூவல்	5,000
31.	கர்நாடகாவிற்காக கதறி அழும் கல்வாரி ஐக்கிய ஜெபக்குழுவும் இராணுவ சகோதரர்களும்	5,000
32.	ஆரோக்கிய வாழ்வுக்கு ஒரு தெய்வீக அமைப்பு	5,000
33.	திரித்துவம் - பாஸ்டர் சாலமோன் ராஜா	5,000
34.	இஸ்லாமியர்களின் கேள்விகளுக்குப் பதில்	....
35.	இது உங்கள் உயிர் காக்கும் முயற்சி (ரூ.2.50)	10,000
36.	தமிழ்நாட்டில் உள்ள வட இந்தியர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க ஒரு உன்னத அழைப்பு (ரூ.2.50)	5,000

சீடிக்கள்

1.	**VCD.** என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும் (தமிழ்)	3,20,000
2	**VCD.** என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும் (கன்னடம்)	40,000
3.	**VCD.** என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும் (ஹிந்தி)	25,000
4.	**VCD.** என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும் (மலையாளம்)	5,000
5.	**VCD.** எழுந்து கட்டுவோம் (தமிழ்)	15,000
6.	**VCD.** முக்திக்கு வழி கிறிஸ்துவமே (தமிழ்)	15,000
7.	**VCD.** கதாகாலட்சேபம் (தமிழ்)	15,000
8.	தேசம் சந்திக்கப்படணுமே கர்த்தாவே	10,000

பதிப்பாசிரியரின் உரை

கி.பி. முதல் நூற்றாண்டிலேயே நமது தேசத்தில் 30 லட்சம் கிறிஸ்தவர்கள் இருந்தார்கள் என்று விவேகானந்தர் கூறியிருக்கிறார். கிறிஸ்தவம் என்கிற பெயர் மேலை நாடுகளில் பரவுவதற்கு முன்பாகவே இந்தியாவில் கிறிஸ்தவம் செழித் தோங்கி வளர்ந்து இருந்தது என டாக்டர் இராதாகிருஷ்ணன், டாக்டர் அம்பேத்கார், டாக்டர் ஜவஹர்லால் நேரு போன்ற பெரும் தலைவர்கள் மாத்திரமல்ல, பல வரலாற்று ஆசிரியர்களும் கூறியிருக்கிறார்கள். முதல் நூற்றாண்டில் நமது தேசத்தில் மொத்தம் எவ்வளவு ஜனத் தொகை இருந்திருக்கும்? 50, 60 லட்சம் இருந்திருக்கலாம். அதில் 30 லட்சம் பேர் கிறிஸ்தவர்கள். அவர்கள் கிறிஸ்தவர்களாகவே பலுகிப் பெருகியிருந்தால் இன்று இந்தியா ஒரு கிறிஸ்தவ நாடாக இருந்திருக்கும். ஆனால் இன்று கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை அஃபிஷியலாக 3% கூட இல்லை என்பது மிகவும் வருத்தத்திற்குரிய ஒரு விஷயம். சபைகளுக்கோ, ஊழியக்காரர்கள், போதகர்களுக்கோ பஞ்சமில்லை. ஆனால் சுவிசேஷம் முழுமையாகப் பரவவில்லை. தேசம் கர்த்தருக்கு சொந்தமாகவில்லை. ஏன்?

நம்மைச் சுற்றியிருக்கிற 85% இந்துக்களுக்கு அவர்கள் அறியாமல் ஆராதித்துக் கொண்டு இருப்பது கிறிஸ்துவைத்தான் என்பதை அவர்களின் வேதங்களில் கூறப்பட்டு இருப்பதைக் கொண்டே அவர்களுக்கு எடுத்துரைத்து அவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கணும். அதுவே **'யூதனுக்கு யூதனைப் போலவும், நியாயப் பிரமாணம் இல்லாதவர்களுக்கு அவர்களைப் போலவும், பலவீனர்களுக்கு பலவீனர்களைப் போலவும் எல்லோருக்கும் எல்லாமும் ஆனேன்'**னு பவுலடிகள் 1 கொரி 9:20-23-ல் கூறுகின்ற பாணி. அதே பாணியைக் கடைப்பிடித்தால் சுவிசேஷம் எளிதாகப் பரவும்.

சமய வரலாற்று ஆசிரியர்கள் சைவம், வைணவம் என்கிற சமயங்கள் தோன்றியதே, கிறிஸ்தவத்தின் அடிப்படையில்தான் என்றும், இந்துக்கள் அறியாமல் ஆராதிப்பது பிதா, குமாரன், பரிசுத்த ஆவியைத்தான் என்றும் வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். ஆனால் இந்த உண்மை எத்தனை பேருக்கு தெரியும்? இந்து மத வேதங்களான நான்கு வேதங்களிலும் மற்றும் பவிஷ்ய புராணம், தாண்டீய மஹாபிரமாணம், பிருஹதாரணி உபநிஷத்துக்கள், சாதாதப வசனங்கள், புருஷசூக்தம் போன்ற பல உபநிஷத்துக்களில் சொல்லப்பட்டு இருப்பது இயேசு கிறிஸ்துவையே என்றும், திருக்குறள் ஒரு கிறிஸ்தவ நூல் என்றும் இன்று ஆதாரபூர்வமாக நிரூபித்து பல ஆசிரியர்கள் எழுதியிருக்கிறார்கள். நானும் என்னுடைய புத்தகங்களில் எழுதியிருக்கிறேன். இயேசு கிறிஸ்து கிறிஸ்தவர்களுக்கு மட்டும் சொந்தமல்லவே. சர்வ லோகத்தையும், சகல மனிதர்களையும் படைத்தது இயேசு கிறிஸ்துதான். அவரை உண்மையோடு தேடுகிற யாவர்க்கும் ஜாதிமத பேதமின்றி அவர் வெளிப்படுவாரே. அப்படித்தான் அவர் நம் இந்திய ஞானிகளுக்கும் ஆழ்வார்கள், நாயன்மார்கள், சைவக் குறவர்கள், சித்தர்களுக்கும் வெளிப்பட்டு இருக்கிறார். இதை விளக்கிக் கூறினால் இந்துக்களுக்கு சுவிசேஷத்தை அறிவித்தல் எளிதாகும்.

இந்திய வேதங்களில் சொல்லப்பட்டு இருக்கும் இயேசுவை எடுத்துரைப்பது சுவிசேஷத்தை அறிவிக்க நல்ல பலன் அளிக்கிறது என 98% போதகர்கள், ஊழியக்காரர்கள், திருச்சபைகள், கிறிஸ்தவர்கள் ஏற்றுக் கொள்ளும் போது ஒருசில பரம்பரைக் கிறிஸ்தவர்களும், ஐரோப்பிய கிறிஸ்தவத்தில் ஊறிப் போன சிலரும் இதற்கு மறுப்பு தெரிவிக்கின்றனர். அந்நிய தேவர்களின் பெயர்களை உச்சரிப்பதா? கூடாது என்கின்றனர். உச்சரிப்பது என்பதை ஆராதிப்பது என்று பொருள் கொள்ள வேண்டும். நாம் வசிக்கும் தெருப் பெயர், நகரின் பெயர், கடைகளில் விற்கப்படும் அத்தியாவசியப் பொருட்கள், நமது அண்டை அயலாரின் பெயர்கள் எல்லாமே அந்நிய தேவர்களின் பெயர்கள்தாமே. அதை எப்படி உச்சரிக்காமல் இருக்க முடியும்? நமது பரிசுத்த வேதாகமத்திலேயே பாகால், கொர்நெலியு,

அப்பெல்லோ, சாத்ராக், மேஷாக், ஆபத்நேக்கோ போன்ற அந்நிய தேவர்களின் பெயர்கள் வருகின்றனவே. அதை உச்சரிக்காமல் இருக்கின்றோமா?

ஆண்டவர் நமது தேசத்தை குறிப்பாக நமது தமிழகத்தை பரலோக ராஜ்யத்தின் சுவிசேஷத்தை அறிவிக்க விசேஷ விதமாக தெரிந்து கொண்டுள்ளார். ஏதேன் தோட்டம் இருந்தது நமது தேசமாகிய கடல்கோளுக்கு முன்பிருந்த லெமூரியாக் கண்டத்தில்தான். முதல் மனிதனான ஆதாமை தேவன் உண்டாக்கியது நமது தேசத்து மண்ணைக் கொண்டுதான். 'பிறவா யாக்கைப் பெரியோன்' (ஆதாம்) கோவில் நம் தேசத்தில் இருந்ததை சிலப்பதிகாரத்தில் காண்கிறோம். உலகம் முழுக்க பரவி இருந்த ஒரே மொழி தமிழ் மொழி. உலக மொழிகளுக் கெல்லாம் தாய்மொழி தமிழ் தான் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். எபிரேயன் என்று அழைக்கப்பட்ட ஆபிரகாமின் மொழியை எபிரேயம் எனக் குறிப்பிடுகின்றனர். அவரின் வழித்தோன்றலாகிய இயேசு கிறிஸ்து பேசிய மொழி அரமேயம் ஆகும். எபிரேய மொழிக்கும் தமிழ் மொழிக்கும் உள்ள நெருங்கிய தொடர்பினை மொழி நூல் வல்லுநர்கள் விளக்கிக் காட்டியுள்ளனர்.

ஆபிரகாம் தனது பயணத்தை தொடங்கிய இடம் ஊர். இது தமிழ் பெயர். சுமேரியா எனப்படும் கல்தேயர் நாட்டில் தமிழர்களின் குடியிருப்பு கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது. உலக நாகரீகம் தோன்றியது நமது தேசமாகிய கிழக்கு நாட்டில் தான். சிந்து வெளி நாகரீகம் தமிழரின் நாகரீகம், சிந்து வெளியிலிருந்து சுமேரியாவிற்கும், சுமேரியாவிலிருந்து எகிப்திற்கும் அந்த நாகரீகம் பரவியது என வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். இயேசு கிறிஸ்து ஒரு வெளிநாட்டவர் அல்லர். அவர் ஆசியா கண்டத்தைச் சேர்ந்தவர். அவர் பேசிய மொழி ஆசிய மொழி. அவரின் 12 சீடர்கள் ஆசியர்கள். மேலை தேசங்களுக்கு கிறிஸ்தவம் பரவுவதற்கு முன்பே நமது தேசத்தில் அது வேரூன்றி இருந்தது.உலக மொழிகள், மதங்கள், நாகரீகம் அனைத்திற்கும் அடித்தளம் நமது மொழி, ஆன்மீகம், தேசமே. இதைப் புரிந்து கொண்டு நமது தேச வேதங்களில் உள்ள கிறிஸ்துவை அறிவித்து தேசத்தை சுதந்தரிப்போம்.

புதிய பார்வையோடு சுவிசேஷத்தை அறிவிப்போம்.

சபைப்பாகுபாடு இன்றி, அனைத்து சபை விசுவாசிகளும் இந்திய அனாரிய சமாஜ் கொடுக்கும் இந்தப் புதிய பார்வையோடு நமது தேச மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும்.இன்னும் நமது தேசத்தின் வேதங்களில், வேதாந்தங்களில், ஆழ்வார்கள், நாயன்மார்கள், சைவக் குறவர்கள், சித்தர்களின் பாடல்களில் இயேசு கிறிஸ்துவைக் குறித்து என்ன சொல்லப்பட்டு இருக்கிறது என்பதை அலசி ஆராய்ந்து பார்க்க ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். நமது சமய இலக்கியங்களில் கிறிஸ்தவத்தின் கொள்கைகள் உபதேசங்கள் எங்கெல்லாம் இருக்கிறது என்பதைக் கண்டறிய வேண்டும். தற்போதுள்ள போதகர்கள், ஊழியக்காரர்களுக்கு பயிற்சி அளித்து, அவர்களை உருவாக்க பல வேதாகமக் கல்லூரிகள் உள்ளன. அவைகள் அனைத்தையும் ஒன்றிணைத்து ஒரு கிறிஸ்தவ பல்கலைக் கழகம் உருவாக வேண்டும் என்பது டாக்டர் சுந்தர் யேசுவடியான் அவர்களின் கனவு. அந்தக் கனவு ஒவ்வொரு கிறிஸ்தவர்களுடைய கனவாக மாறட்டும். அந்தக் கனவு நனவாகும்படி அதற்காக தேவ சமூகத்தில் நாம் கண்ணீரோடு ஜெபிப்போம்.

இந்திய அனாரிய சமாஜை நிறுவிய டாக்டர் எம்.சுந்தர் இயேசுவடியான் இந்த 82 வயதிலும் எப்படியாவது சுவிசேஷம் பரவ வேண்டும் என்கிற ஆதங்கத்தில் அயராது ஓடி உழைத்துக் கொண்டு இருக்கிறார்.

அவரது கனவுகள் நனவாகவும், தீர்க்காயுசோடும், நல்ல தேகபலத்தோடும் இன்னும் நீண்ட காலம் கர்த்தருடைய பணியை செய்ய அவரை பலப்படுத்தவும் நாம் ஒவ்வொருவரும் ஜெபிப்போம். கர்த்தரின் கிருபையின் கரம் அவரை தாங்கி வழி நடத்துவதாக!

கர்த்தரின் பணியில்

உங்கள் சகோ. **எஸ்.தாயப்பன்**

இடம்: **IAS Youth Training Centre**

அந்தோணி ராஜ் : **(Training Centre** வாசலில் நிற்பவரைப் பார்த்து) குட்மார்னிங் சார், ஸ்ரீதர் சாரைப் பாக்கணும்.

ஸ்ரீதர் : நான்தான் ஸ்ரீதர். என்ன விஷயம் சொல்லுங்க.உள்ளே வாங்க.

அ.ராஜ் : பத்திரிகையில உங்களோட விளம்பரம் பாத்தேன். நானும் IAS தேர்வுல பங்கு பெற விரும்புறேன். என்னை சேத்துக்கிட்டு டிரெயினிங் கொடுப்பீங்களா? இது வாலிபர்களுக்கு மட்டுமா? இல்லை, கொஞ்சம் வயசானவங்களும் சேரலாமா? என்னோட கசினுக்கு இப்போ வயது 40. அவரும் ஜாயின் பண்ண விரும்புறாரு. ஃபீஸ் எவ்வளவு? உங்க கண்டிஷன்ஸ் என்னென்ன? நான் தெரிஞ்சுக் கிடலாமா?

ஸ்ரீதர் : **You are most welcome.** வாங்க. **Come and sit.** (அ.ராஜ் உட்காருகிறார்)

ஸ்ரீதர் : நீங்க IAS அதிகாரியா ஆகி இந்த நாட்டுக்கு தொண்டு செய்ய விரும்புறீங்கன்னு நினைக்கிறேன். அதுக்கான பயிற்சி கொடுக்கின்ற சென்டர் அடுத்த தெருவுல இருக்குது. நாங்க நடத்துற IAS பயிற்சி மையத்தின் முழுப் பேரு 'இந்தியன் அனாரிய சமாஜ் வாலிபர் பயிற்சி மையம்'. அதாவது நம்ம இந்தியாவின் ஆதி குடிமக்களாகிய 90% திராவிட இந்தியர்களின் ஆன்மிக விடுதலைக்காகவும், அவங்களோட மகிழ்ச்சியான நித்திய வாழ்க்கைக் காகவும் தொண்டு செய்யுறதுக்கு விரும்பும்

பணியாளர்களை உருவாக்குறதுக்கு உண்டான அமைப்பு ஆகும். அதைப் பத்தி விவாதிக்கத்தான் நாங்க இங்கே இப்போ கூடியிருக்கோம். விரும்புனா நீங்களும் இதுல பங்கு பெறலாம்.

அ.ராஜ் : தேங்க்ஸ்.

ஸ்ரீதர் : உங்களை நீங்களே அறிமுகம் செய்யலாமே!

அ.ராஜ் என்னோட பேரு அந்தோணிராஜ். நான் பொலிட்டிக்கல் சயன்ஸில் பி.எச்.டி. பட்டம் வாங்கி இருக்கேன். நான் ஒரு R.C. நானும் என் ஃபேமிலி எல்லாம் எங்க சபை கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு வாழ்றோம். இந்த உலகத்தில இருக்கிற 120 கோடி கத்தோலிக்கர்களையும் எங்க போப்பாண்டவர் ரோம்ல இருந்துக்கிட்டு ஆட்சி செய்யுறாரு. போப்பாண்டவரின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிஞ்சு வாழ்றவங்கதான் உண்மையான கிறிஸ்தவர்கள். நாங்க எல்லாருமே பரலோகத்தில் நித்தியமா வாழ்வோம்னு நான் நம்புறேன். கத்தோலிக்க உபதேசங்களை மறுத்து, பிரிந்துபோன கிறிஸ்தவங்க திரும்பி வர்றதுக்காக, நாங்க ஜெபிச்சுக்கிட்டு இருக்கோம். கத்தோலிக்கர்களைப் போல வேற எந்த சபையும் சமூக சேவை செய்யலைன்னு உங்களுக்குத் தெரியும்னு நான் நம்புறேன்.உதாரணமா மதர் திரேசாவின் தொண்டுகளைப் பாருங்க. உங்க IAS பயிற்சி கத்தோலிக்கர்களை விட எந்த விதத்தில வித்தியாசமா சேவை செய்ய உதவும்?

ஜான்சன் : (குறுக்கிட்டு) பிரதர், நான் ஒரு சில வார்த்தை சொல்லலாமா?

ஸ்ரீதர் : Of course தாராளமா.

ஜான்சன் : என்னோட பேரு ஜான்சன். நான் அகழ்வாராய்ச்சியில் பி.எச்டி. பட்டம் வாங்கியிருக்கேன். எங்க அப்பா சி.எஸ்.ஐ. சினாட் செக்ரட்டரி. சி.எஸ்.ஐ. சபைதான் தமிழ்நாட்டில லட்சக்கணக்கான பைபிளை வழங்கி இருக்கு. இன்னும் கொடுத்துக்கிட்டு இருக்கு. தமிழகத்திலே சிஎஸ்ஐ சபை ரொம்ப சிறப்பா செயல்படுது. VBS, பக்தி முயற்சி சங்கம், பெண்கள் சங்கம், ஆண்கள் சங்கம்னு பல்வேறு கிளை அமைப்புகளை நடத்தி, ஏராளமான காணிக்கைகளை சேகரிச்சு, விலை உயர்ந்த பரிசுகளை கொடுத்து,ஜனங்களை ஊக்குவிக்கிறோம். எங்க ஆலயங்களை புதுப்பிச்சு, உயரமான கோபுரங்களைக் கட்டி மக்களை வியக்க வைக்கிறோம்.

எங்க கன்வென்ஷன் கூட்டங்கள்ல பல்லாயிரக் கணக்கான மக்கள் கூட்டம் கூட்டமா கலந்துக்கி டுறாங்க. எங்க ஸ்கூல்ஸ், காலேஜ்ஜஸ், ஹாஸ்பிடல்ஸ் போன்ற சமூக சேவை நிறுவனங்களுக்கு இணையா மத்த சபைகள் செய்யலைன்னு நான் நினைக்கிறேன். கிறிஸ்தவர்களின் சமூக சேவைகள்ல பெரும் பங்கை அனுபவிப்பது பெரும் பகுதியான இந்து மற்றும் புற ஜாதி மதத்தினர்தான் என்பது நாடறிந்த உண்மை. ஆனாலும் கிறிஸ்தவர்களுக்கு புது ஆலயங்கள் கட்ட அனுமதி மறுக்கப்படுகிறது. மத மாற்ற தடைச் சட்டங்களை போட்டு இருக்காங்க. அடிப்படை உரிமைகள் கூட கிறிஸ்தவர்களுக்கு மறுக்கப் படுகிறது.

ஏஞ்சல் : (குறுக்கிட்டு) பிரதர், நடுவுல பேசுறதுக்கு மன்னிக்கணும். என்னோட பேரு ஏஞ்சல். நான் அமெரிக்கன் ஏரோநாட்டிக்கல் இன்ஜினியரிங் யுனிவெர்சிட்டியில் பி.எச்டி. பட்டம் பெற்று இருக்கேன். என்னோட தாய்மாமா பெண்ட்டிகாஸ்ட்

சபைகளின் கூட்டமைப்பின் பேராயராக இருக்காரு. இப்போ பெண்டிகாஸ்ட் சபைகள் மட்டும்தான் தீவிரமா நற்செய்திப் பணி செஞ்சுக்கிட்டு வருதுன்னு நான் நம்புறேன். எங்களுக்கு சிலை வணக்கமும், மேரி வணக்கமும் கிடையாது. இயேசு முழுகி ஞானஸ்நானம் எடுத்த மாதிரி நாங்க எல்லாரும் முழுகி ஞானஸ்நானம் எடுக்குறோம். பரிசுத்த ஆவியின் அபிஷேகம் இல்லாம எங்களைப் போல வேற எந்த சபையினாலும் தீவிரமா ஊழியம் செய்ய முடியாதுன்னு நான் உறுதியா நம்புறேன்.

தனபால் : (குறுக்கிட்டு) ஒன் மினிட் ப்ளீஸ்! என்னோட பேரு தனபால்.எங்கப்பா இரட்சண்ய சேனை சபை கமிஷனரா டில்லியில வேலை பாக்குறாரு. நான் லண்டன்ல இருக்கிற ஆக்ஸ்போர்டு யுனிவெர்சிட்டியில சோஷியல் ஜஸ்டிஸ் என்கிற தலைப்புல பி.எச்.டி. பட்டம் வாங்கியிருக்கேன். ஞானஸ்நானம் போன்ற சமயச் சடங்குகள், கடைப்பிடிக்க முடியாத சட்டங்கள், மற்றும் கோட்பாடுகளைக் காட்டிலும் மனிதனுடைய ஆன்மிக விடுதலைக்கு ரொம்பவும் முக்கியமானது உணவு, உடை, உறைவிடம் ஆகிய அடிப்படை தேவைகள் சந்திக்கப்படணும்ங்கிறதுதான்னு நான் நம்புறேன். இரட்சண்ய சபையின் தலைவர் வில்லியம் பூத் அவரோட கொள்கைகளான, Soap, Soup and Salvation என்ற கொள்கைதான் இந்தியாவுக்கு ரொம்பவும் பொருந்தும்.

இருந்தாலும் எங்க சபை சாதி ஏற்றத் தாழ்வுங்கிற இந்திய சமூக அடிமைத் தளையில் சிக்கித் தவிக்கிறது. அன்பு செய்யுன்னு பிரசங்கிக்கிறோம். ஆனா சபைகளுக்குள்ளே அன்பு இல்லையே. இந்தியக் கிறிஸ்தவர்கள் இன்னும் இந்த தேசிய பாவத்திலிருந்து விடுதலை அடையலையே. இது

நம்மோட தேசத்தின் சாபம். இந்தப் பாவம் இந்தியாவில் மட்டுமே எப்படி நுழைஞ்சது? இந்தியாவுல ஊழிய எழுப்புதலும் சபை வளர்ச்சியும் இல்லாததுக்கு முக்கிய காரணம், தடையே இந்த ஜாதி ஏற்றத் தாழ்வுதான். இதைப் பத்தி உங்க கருத்தை நான் அறியலாமா?

தேவி : ஹாய் ஃபிரண்ட்ஸ்! நான் தேவி. நீங்க எல்லாரும் ரொம்ப படிச்சிருக்கீங்க. எனக்கு பி.ஏ. வரைதான் படிக்க முடிஞ்சது. அதுவும் வரலாறுதான் சப்ஜெக்ட். கவர்மெண்ட் காலேஜ்லதான் படிக்க முடிஞ்சது.ஆனா யுனிவர்சிட்டி ஃபஸ்ட் வந்துட்டேன். வசதி இல்லாததுனால என்னை ஒரு கத்தோலிக்க சபையிலே சேர்த்து, அவங்க ஹாஸ்டல்ல விட்டுத்தான் என்னைப் படிக்க வச்சாங்க. பிளஸ் டு பாஸ் பண்ற வரைக்கும் அந்த ஹாஸ்டல்ல இருந்துதான் படிச்சேன். ஹாஸ்டல்ல இருந்த மேல் ஜாதி மாணவிகளின் தொல்லையினால அங்கே இருந்து படிக்க எனக்கு இஷ்டம் இல்லாததால அங்கேயிருந்து வந்துட்டேன்.

ஒரு Independent Pentecost Pastor அவர் நடத்துற ஒரு ஹாஸ்டல்ல எனக்கு அட்மிஷன் தந்தாரு. அவரோட சர்ச்சுல, ஆராதனைக்குப் போறது எனக்கு ரொம்ப மகிழ்ச்சியாக இருந்தது. அந்த சபையிலேயே எனக்கு ஞானஸ்நானம் கொடுத்து எம் பெயரை தேவி மெர்லின்னு மாத்தினாங்க. காலேஜ்ல நான் தேவிங்கிற பேர்லயே ஒரு இந்துவாவே படிச்சு முடிச்சேன். என்னோட கையெழுத்தை தேவி மெர்லின்னு நான் வச்சுக்கிட்டேன். பி.ஏ.யில யுனிவர்சிட்டி ஃபர்ஸ்ட் வந்ததுனாலயும், IAS தேர்வுல நான் பாஸ் பண்ணினதாலயும், எனக்கு SC கோட்டாவுல IAS பதவியில வேலை கிடைச்சது. மகிழ்ச்சியா வேலை பார்த்துட்டு இருந்தேன். சில

விஷமிகள் நான் கிறிஸ்தவளாக மாறிட்டதால எனக்கு SC கோட்டாவுல வேலை கொடுத்தது சட்ட விரோதம்னு கேஸ் போட்டாங்க.

நண்பர்களே, இந்தியாவுல உள்ள SC கிறிஸ்தவர் களுக்கு எதிரா மத்திய அரசு செய்யுற ஒரு பெரிய அநீதி என்ன தெரியுமா? ஒரு SC கிறிஸ்தவனா மாறினா, அவன் BC யா ஆக்கப்பட்டு அவனோட SC உரிமைகள் பறிக்கப்படுது. ஆனா ஒரு BC கிறிஸ்தவ ரானால் அவங்க BC யாவே கருதப்பட்டு அவங்களுக்கு BC உரிமைகள் வழங்கப்படுது. அதுமட்டுமல்ல, ஒரு SC சீக்கிய மதத்துக்கோ அல்லது புத்த மதத்துக்கோ மாறினா அவங்களுக்குத் தொடர்ந்து SC உரிமைகள் கொடுக்கப்படுகிறது. இதெல்லாம் SC கிறிஸ்தவர்களுக்கெதிரா அரசு காட்டும் ஒரு அப்பட்டமான பாரபட்சம் இல்லையா? நண்பர்களே, இந்த பேக்ரவுண்டுலதான் அரசு எனக்கு நோட்டீஸ் அனுப்பி என்னை ஏன் வேலையிலிருந்து நீக்கக் கூடாதுன்னு கேள்வி கேட்டிருக்கு. இதுக்கு எதிரா இந்திய கிறிஸ்தவர்கள் குரல் கொடுக்க வேண்டாமா? உங்க அமைப்பால என்னைப் போன்றவங்களுக்கு ஏதாவது உதவி செய்ய முடியுமா?

தனபால் : இது அநியாயம். இந்தப் பிரச்சினைக்கு நாம ஏதாவது செஞ்சுதான் ஆகணும். இல்லேன்னா, நாம யாருமே கிறிஸ்தவங்க இல்லை.

ஸ்ரீதர் : well friends, நீங்க எல்லாரும் அவங்கவங்க இருக்கிற சபைகளின் சிறப்புக்களையும், சில குறைகளையும் சொன்னீங்க.ஆனா இந்த வருஷம் எத்தனை ஆத்துமாக்களை திருச் சபைக்கு புறம்பேயிருந்து உங்க சபைகள்ல சேர்ந்தாங்கன்னு யாருமே சொல்லலையே. இந்தியா சுதந்திரம் அடைஞ்சப் பிறகு இந்திய திருச்சபையில கிறிஸ்தவர்களின்

எண்ணிக்கை ஒரு பெர்செண்ட் கூட வளரலை. சொல்லப் போனா, கடந்த 30 ஆண்டுகள்ல 30 லட்சம் கிறிஸ்தவங்க திருச்சபையிலிருந்து காணாமப் போயிட்டாங்கன்னுதான் புள்ளி விவரம் சொல்லுது. இந்த நாட்கள்ல ஒரு டினாமினேஷன்ல இருந்து இன்னொரு டினாமினேஷனுக்கு மாறுகிற ஒரு அவலத்தைத்தான் அதிகமாகப் பார்க்க முடியுது. இது ஊழிய எழுப்புதலும் இல்லை. சபை வளர்ச்சியும் இல்லை.

நீங்க எல்லாரும் உங்களோட உயர்ந்த கல்வித் தகுதிகளையும், அந்தஸ்தையும் சொன்னீங்க. நிச்சயமாகவே நீங்க சார்ந்திருக்கிற சபையின் ஒத்தாசையாலதான் இந்த உயர்வைப் பெற்றீங்கன்னு உங்களுக்கே தெரியும்.ஆனா திருச்சபைக்கு உங்களோட பங்களிப்பு என்னன்னு சிந்திச்சிருக் கீங்களா? அதைப் பத்தி யாருமே கூறலையே. உலகின் சீர்கேடுகளை அகற்ற இயேசுவோட சீஷர்கள் இரத்த சாட்சியா மரிச்சாங்க. நம் இந்தியாவின் தேசிய பாவங்களை அகற்ற நீங்க என்ன தியாகங்கள் செய்யப் போறீங்க? **‘கிரியை இல்லாத விசுவாசம் செத்தது’**ன்னுதானே வேதம் சொல்லுது.

ஜான்சன் : பிரதர். நீங்க எந்த டினாமினேஷனை சேர்ந்தவர்னு நாங்க தெரிஞ்சுக்கலாமா?

ஸ்ரீதர் : நான் எந்த டினாமினேஷனையும் சேர்ந்தவன் இல்லை. ஆனா எல்லா டினாமினேஷனும் என்னோட சபைதான்.

அ.ராஜ் : அப்படீன்னா, உங்க திருமணச் சடங்கு, மரித்த பிறகு நல்லடக்கம் இதுக்கு என்ன செய்வீங்க?

ஸ்ரீதர் : திருமணச் சடங்கும், ஈமச் சடங்கும்தான் ஒரு கிறிஸ்தவனுக்கு முக்கியமா? ஆதித் திருச்சபை

மக்கள் எந்த டினாமினேஷனைச் சார்ந்தவங்க? அவங்க எந்த டினாமினே ஷன்படி இந்த சடங்குகளை நிறைவேற்றினாங்க? இந்தியாவுல, கிறிஸ்தவர்கள் அல்லாத 115 கோடி மக்களின் திருமணங்களும், ஈமச் சடங்குகளும் நடக்கலையா? ஒரு கிறிஸ்தவனுக்கு இவைகளைக் காட்டிலும் முக்கியமானது ஆத்தும ஆதாயத்துக்கான பணிகளைச் செய்யுறதுதான். எந்த டினாமினேஷனையும் சேராத என் தந்தையிடமிருந்து நான் கற்றுக் கொண்ட உண்மை இது. என்னோட அனுபவத்தையும் கொஞ்சம் கேளுங்க.

நான் இரண்டு வருஷங்களுக்கு முன்னாடி வரைக்கும் ஒரு தீவிர இந்துவாக இருந்தவன். ஏன்? ஒரு கிறிஸ்தவ எதிர்ப்பாளனாகவே இருந்தேன். என் தகப்பனார் ஒரு இந்துக் கோயில் பூசாரி. அவர் இந்து வேதங்களையும், வேதாந்தங்களையும், அனுஷ்டானங்களையும் ரொம்ப பக்தியோட கத்துக்கிட்டு அனுசரிச்சு வந்தாரு. ஆனா அவரோட தனிப்பட்ட வாழ்க்கையில அவருக்கு தூய்மையும், அமைதியும் இல்லேங்கிறதை அவரே அறிக்கை செஞ்சிருக்காரு. அவர் கும்பிட்ட தெய்வங்கள் அவருக்கு நிம்மதியையும், தூய வாழ்க்கையையும் கொடுக்கலை.அப்படி ரொம்ப கலங்கி இருந்த நாட்கள்ல ஒரு நாள் இயேசு கிறிஸ்து அவருக்கு தரிசனமானார். கடவுளோட நிழலைத்தான் என் தந்தை நிஜமென்று நினைச்சு இதுவரை அதை சேவிச்சு வந்ததாகவும், நிஜத்தை தெரிங்சுக்கிட ணும்னா பரிசுத்த வேதாகமத்தை படிச்சு, அந்த வசனங்களின் வெளிச்சத்தில இயேசுவைப் பின்பற்றணும்னு போதிக்கப் பட்டார்.

மேலும் இன்னிக்கு காணப்படுகிற கிறிஸ்தவ சபைப் பிரிவுகள்ல ஒண்ணு கூட கிறிஸ்துவுக்கு 100க்கு 100 ஏற்புடையது அல்லன்னும், அதேசமயம் எல்லா

சபைப் பிரிவுகளிலேயும் இயேசுவின் போதனைகளில் ஏதாவதொரு நல்ல அம்சம் இருக்கிறதுனாலேதான் அவைகளையும் இயேசு பொறுமையோட பயன்படுத்துறார்னும் விளக்கம் பெற்றார். எனக்கும், என் தந்தையார் பெற்ற தெளிந்த அறிவை பகிர்ந்து கொடுத்து கிறிஸ்தவத்தை அல்ல, கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு வாழ என்னை அவர் வழி நடத்தினார்.

என் தகப்பனாருடைய ஆலோசனையின்படி இந்திய சமயங்களில் நிழலாகப் புதைந்து கிடக்கும் இயேசுவை நான் தேட ஆரம்பிச்சேன். புதையுண்டு கிடக்கும் பல சத்தியங்களை விளக்கும் பல அமைப்புக்களை ஆண்டவர் இயேசு இந்த நாட்களில் எழுப்பி வருகிறதை நான் பார்க்கிறேன்.அந்த வரிசையில் உள்ள ஒரு அமைப்புத்தான் குமரி மாவட்டத்தில் இந்நாட்களில் செயல்பட்டு வரும் ‘இந்தியன் அனாரிய சமாஜ் ஊழியங்கள்’. இந்த ஊழியத்தின் வாலிபர் பிரிவுதான் இந்த IAS வாலிபர் பயிற்சி மையம். இந்த அமைப்பில நான் சேர்ந்த பிறகு பல புதிய உண்மைகளை புரிஞ்சுக்கிட்டேன்.

ஏஞ்சல் : அது என்ன புதிய உண்மைகள்?

ஸ்ரீதர் : சொல்றேன். கேளுங்க.இந்தியா ஒரு இந்து நாடு அல்ல. இது ஒரு கிறிஸ்தவ நாடே.

தனபால் : பிரதர், உங்களுக்கு மூளை கீளை குழம்பிடுச்சா என்ன?

ஸ்ரீதர் : கொஞ்சம் பொறுமையா கேளுங்களேன். சுவாமி விவேகானந்தரோட கூற்றுப்படி தூய தோமா அப்போஸ்தலர் இந்தியாவுல செஞ்ச ஊழியத்தின் தாக்கத்தால கி.பி. முதல் நூற்றாண்டில் 30 லட்சம் கிறிஸ்தவர்கள் இருந்தாங்களாம். அவர்கள் பலுகிப்

பெருகி இருந்தா, இன்னிக்கு அவங்க குறைந்தபட்சம் 90 கோடியா வளர்ந்து கிறிஸ்தவர்கள்ங்கிற பெயர்ல அறியப்பட்டு இருப்பாங்க. இந்தியா ஒரு கிறிஸ்தவ நாடு என்று அறியப்பட்டு இருக்கும்.

அ.ராஜ் : அந்த 30 லட்சம் கிறிஸ்தவர்கள் என்ன ஆனாங்க?

ஸ்ரீதர் : அவங்கதான் இப்போ இந்து மதத்தினர் என்று அறியப்படும் சைவ, வைணவர்கள்.

தனபால் : சைவ, வைணவர்கள் எல்லாம் மேல் ஜாதிக்காரங்க ஆச்சே. அவங்க எப்படி கிறிஸ்தவங்களா இருக்க முடியும்?

ஸ்ரீதர் : பிரதர் தனபால், இந்த மேல் ஜாதி - கீழ் ஜாதி என்றெல்லாம் சமூகத்தை பிரிச்சது இந்தியாவுக்கு பிழைக்க வந்த ஆரியர்களின் சூழ்ச்சியாகும். ஆரியர்கள் இந்தியாவுல 10% கூட இல்லை. ஆனா இந்தியாவில கடந்த 2000 வருஷங்களுக்கு மேலா, தங்களோட ஜாதிக் கோட்பாட்டை திணித்து மண்ணின் மைந்தர்களாகிய 90% திராவிடர்களை ஆரியர்களுடைய இந்துத்துவம் என்கிற போலி ஆன்மீகத்துக்கு அடிமைப்படுத்திட்டாங்க. நாம எல்லாருமே உயர் கல்வி பட்டங்கள் வாங்கினவங்க. ஆனா இந்த உண்மைகளை நமது பைபிள் காலேஜ்லேயோ, சண்டே ஸ்கூலிலோ சொல்லிக் கொடுத்திருக்காங்களா? இந்த உண்மைகளை அவங்க தெரிஞ்சிருந்தா இந்த நாட்டை ஆளும் உரிமையை திராவிட இயக்கத்துக்கு வழங்க உதவும் இயக்கங்களில் ஈடுபட இந்தியக் கிறிஸ்தவர்களுக்கு கத்துக் கொடுத்து, அதுக்காக நம்மோட முன்னோர் களை பக்குவப்படுத்தியிருப்பாங்க. அப்படி நடந்திருந்தா இந்திய கிறிஸ்தவம் சமத்துவத்துடனும், சமூக நீதியோடயும் வளர்ந்திருக்கும். சகோதரி தேவி மெர்லின் அனுபவிக்கும் பிரச்சனைகளும்

உருவாகியிருக்காது. இந்த வரலாற்று உண்மைகளை எல்லாம் புரிஞ்சுக் கிட்டு கிறிஸ்தவத்தை ஒரு புதுப்பார்வையோடே வழி நடத்துறதுதான் நம்ம IAS வாலிபர் பயிற்சி மையத்தின் நோக்கம்.

தேவி : ஆஹா, அற்புதமான சிந்தனை. இந்த உண்மைகள் ஏன் இதுவரையிலும் நம்ம திருச்சபைகள்ல எடுத்துச் சொல்லப்படலை? Anyway better later than never.

ஸ்ரீதர் : கிறிஸ்து ஒருவரே, திருச்சபையும் ஒன்றே, ஆனா டினாமினேஷன்களோ பல ஆயிரம். இத்தனை டினாமினேஷன்கள் தேவையா? கிறிஸ்தவம் இந்தியாவுல வந்து 2000 வருஷம் ஆகியும் இன்னிக்கு இந்தியக் கிறிஸ்தவர்கள் அஃபிஷியலா 2.3% தான் இருக்கோம். இதுக்கு என்ன காரணம்னு நாம் என்னிக்காவது சிந்திச்சிருக்கோமா?

ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாக இந்தியக் கிறிஸ்தவர்கள் ஒண்ணா சேர்ந்து செயல்பட்டு இந்தியாவின் உண்மையான சமய, கலாச்சார, சமூக மற்றும் அரசியல் வரலாற்றை மக்களுக்கு எடுத்துச் சொல்றதுதான் இன்றைய இந்தியாவுக்கு தேவையான நற்செய்திப் பணின்னு நான் நினைக்கிறேன். 90% திராவிட இந்தியர்கள் தங்கள் இன விடுதலை அடையாமல், அவங்க இயேசு கிறிஸ்து கொடுக்கிற ஆன்மீக விடுதலையை முழுமையா அடைய முடியாது. திராவிட இன விடுதலைக்காக அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார் போன்றோர் பாடுபட்டாங்க. ஆனா அவங்களால ஆன்மீக விடுதலையை கொடுக்க முடியலையே.

ஆன்மீக விடுதலை இல்லாம இன விடுதலை நிலை நிக்காது. அதேபோல இன விடுதலை இல்லாம, ஆன்மீக விடுதலையும் நிலை நிக்காது. திராவிட இன விடுதலையும், கிறிஸ்து கொடுக்கிற ஆன்மீக

விடுதலையும் இணைந்து, சேர்ந்து செயல்படுதலே முழுமையான இந்திய ஊழிய எழுப்புதலுக்கு தேவையானது ஆகும். **'இஸ்ரவேலர் (அதாவது தனது இனத்தார்) இரட்சிக்கப்படுவதே தனது இருதயத்தின் விருப்பமும், தேவனை நோக்கி நான் செய்யும் விண்ணப்பமுமாய் இருக்கிறது'**ன்னு பவுல் சொல்றது நம்ம இந்தியாவுக்கு ரொம்ப சரியா பொருந்தும்.

ஏஞ்சல் : அப்படீன்னா இப்போ நாம செய்யுற ஊழியமெல்லாம் ஊழியம் இல்லையா?

ஸ்ரீதர் : நான் அப்படி சொல்லலை. நான் சொல்றது என்னன்னா, இந்தியாவுக்குப் பொருத்தமான முறையில, இங்கே சுவிசேஷம் வழங்கப் படலைங்கிறதுதான் என்னோட கருத்து. உதாரணமா, அத்தேனே பட்டிணத்தில் மார்ஸ் மேடையில நின்னு பிரசிங்கித்த பவுல் அத்தேனேயரோட பக்தியை மெச்சிப் பேசினார். கிறிஸ்தவ ஊழியர்கள் யாராவது நம்ம இந்து சகோதரர்களோட பக்தியை பாராட்டுறோமா? பவுல் செய்ததைப் போல இந்தியாவிலுள்ள இந்து ஆலயங்களையும், இந்து புலவர்களோட இலக்கியங்களையும் பார்வையிட்டு இந்துக்கள் அறியப்படாத தேவனாக இயேசுவையே ஆராதிக்கிறார்கள் என்கிற உண்மையை நாம அறிந்திருக்கோமா? யூதனுக்கு யூதனைப் போலவும், கிரேக்கனுக்கு கிரேக்கனைப் போலவும், இந்துக்களுக்கு ஒரு இந்துவாவும் நாம சுவிசேஷத்தை அறிவிக்க தவறிட்டோம்.

அ.ராஜ் : இந்தக் கருத்துக்களை **'இந்தியன் அனாரிய சமாஜ் ஊழியங்களின் கருத்தரங்கு'**களில் நான் கேள்விப் பட்டிருக்கேன்.

ஜான்சன் : நானும் **'இந்தியா ஒரு கிறிஸ்தவ நாடு'** என்ற பொருளில் நடந்த ஒரு கருத்தரங்கில் கலந்து கொண்டு இந்த கருத்துக்களை கேள்விப்

பட்டிருக்கேன். அதேபோல சென்னையிலுள்ள 'நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் லீடர்ஷிப் ட்ரெயினிங்' (NILT) என்கிற நிறுவனமும் இந்த கருத்துக்களில் பயிற்சி கொடுக்கும் வகுப்புகளை நடத்துகிறது.

ஏஞ்சல் : 'இந்தியாவில் சுவிசேஷம் முழுமையாகப் பரவாதது ஏன்?'கிற தலைப்பில் நடந்த ஒரு கருத்தரங்கில நானும் கலந்துக்கிட்டு இருக்கேன். ஆனா அங்க சிவன், விஷ்ணு, கணபதி, பிரம்மா, ஐயப்பன் போன்ற பெயர்களை அவங்க சொல்றதுதான் எனக்குப் பிடிக்கலை.

ஸ்ரீதர் : இப்படிப்பட்ட கருத்தரங்குகள்ல பல ஆய்வாளர்களின் கருத்துகளை நானும் கேள்விப்பட்டபடியாலதான் இந்த மையத்தின் பொறுப்பை நான் ஏத்துக்கிட்டு, இந்த கருத்துக்களை கிறிஸ்தவ ஊழியர்களும், சபைத் தலைவர்களும், விசுவாசிகளும், வாலிபர்களும், சிறுவர்களும், அனைத்து இந்தியர்களும் அறிய வேண்டும் என்கிற வாஞ்சையிலே இந்த மையத்தில நான் பணி செஞ்சுக்கிட்டு இருக்கேன்.

சிஸ்டர் ஏஞ்ஜல் சொன்ன சிவன், விஷ்ணு, கணபதி, பிரம்மா, ஐயப்பன் போன்ற பெயர்கள் எல்லாம் கிறிஸ்துவுக்கு நம்ம முன்னோர்கள் கொடுத்த புராணக் கதை பெயர்களே என்றும், சபைகளில் ஆன்மீக விளக்கம் பெற பைபிளைத்தான் படிக்கணும்னு பல அறிஞர்களோட ஆய்வேடுகள் விளக்குகின்றன. புராணக் கதைகளோட, இந்திய சமய நூல்களோட உண்மையான விளக்கங்களை ஐரோப்பிய மிஷனெரிமார்களுக்கு தெரிஞ்சு அவங்க நம்மோட முன்னோர்களுக்கு இந்த விளக்கங்களை கூறியிருந்தாங்கன்னா, நமக்குள்ளே இந்த கேள்விகளே எழும்பி இருக்காதில்லையா? நம்மோட

அடுத்த தலைமுறைக்காவது இந்த உண்மைகளை நாம சொல்லிக் கொடுத்துட்டு போக வேண்டாமா?

அ.ராஜ் : ஓகே. இந்த பயிற்சியினால திருச்சபைக்கு என்ன நன்மைகள் கிடைக்கும்?

ஸ்ரீதர் : நல்ல கேள்வி. இந்தக் கேள்விக்கு கிருபா மேடம் அவங்க பதில் சொல்லுவாங்க. சகோதரி கிருபா இந்தியன் ரிலிஜன்ஸில பி.எச்டி. பட்டம் பெற்றவங்க. இவங்க இந்த மையத்தில என்கூட பயிற்சி அளிக்கும் ஒரு உடன் ஊழியர்.

கிருபா : நன்றி ஸ்ரீதர். ஹாய் பிரண்ட்ஸ், இந்த பயிற்சியினாலே திருச்சபைக்கு கிடைக்கும் நன்மைகள்ல முதல்ல கிறிஸ்தவம் ஒரு ஆசிய மதம், அது ஐரோப்பிய மதம் இல்லைங்கிற ஒரு தெளிவு நமக்குக் கிடைக்கும். அடுத்து,

- கி.பி. முதல் நூற்றாண்டிலேயே கிறிஸ்தவம் இந்தியாவுல வேரூன்றி விட்டது.
- இந்தியாவில கிறிஸ்தவம் பரவி சுமார் 300 வருஷங்களுக்குப் பிறகுதான் ஐரோப்பியக் கண்டத்திலுள்ள ரோம்ல கிறிஸ்தவம் ஒரு அங்கீகரிக்கப்பட்ட மதமாகப் பரவ ஆரம்பிச்சது. இன்னிக்கு ஐரோப்பிய நாடுகள் எல்லாமே கிறிஸ்தவ நாடுகள்.
- இந்தியர்களின் இன்றைய கடவுள் நம்பிக்கை தோமா வழி வந்த ஆதி கிறிஸ்தவத்திலிருந்துதான் உருவானதுங்கிற உண்மை தெரியும். இன்னிக்கு இந்து மதம்னு சொல்லப்படும் சைவம் வைணவம் தோமா வழி வந்த ஆதி இந்திய கிறிஸ்தவத்தின் கிளைகள்தான்கிற உண்மையும் தெரியும். இந்த விளக்கங்களை நாம பெற்றுக் கொண்டதால இந்துக்கள் மேல நாம வச்சிருக்கிற வெறுப்பை

நீக்கி விட்டு அவங்களை நம்மால நேசிக்க முடியும்.

- இந்திய மக்களில் 90% திராவிடர்கள். இந்திய வரலாறு என்றால் அது திராவிடர்களின் வரலாறாகத்தான் இருக்க வேண்டும். இந்தியாவின் உண்மையான வரலாறு இன்னமும் எழுதப்படலைங்கிற உண்மை வெளிப்படுறதால, இந்திய வரலாற்றை ஆய்வு செய்து எழுத, திராவிட இந்தியர்கள் ஒன்றாக இணைஞ்சு, செயல்படணுங்கிற வரலாற்றுத் தேவையும் வெளிப்படும்.

- அடுத்து இந்திய மொழிகளுக்கெல்லாம் தாய்மொழி தமிழ்தான்னும், சமஸ்கிருத மொழி, எழுத்துக்கள், தமிழுக்குப் பின் கி.பி. 2ம் நூற்றாண்டில்தான் உருவாகியதால, தமிழில் உள்ள சமய இலக்கியங்கள் தான் இந்திய சமயங்களுக்கு ஆதாரம்ங்கிற உண்மையும் வெளிப்படும்.

தனபால் : தமிழ் சமஸ்கிருதத்துக்கு முந்தின மொழியா? இருக்கவே இருக்காது. சமஸ்கிருதத்திலிருந்து தான் உலகமொழிகள் எல்லாம் உருவாச்சுதுன்னுதான் எனக்கு கற்றுக் கொடுத்திருக்காங்க.

கிருபா : பிரதர் தனபால், இப்படி உண்மைக்கு மாறான தகவல்கள் ஏராளம் இந்திய வரலாற்றில் நுழைஞ்சிட்டபடியினாலதான் மக்கள் அறிவுக் குருடர்களாக வாழ்றாங்க. உங்களுக்குத் தெரியுமா? கி.பி. 150 வரைக்கும் சமஸ்கிருத மொழியில பொறிக்கப்பட்ட எந்த ஒரு கல்வெட்டும் இல்லைன்னு. குஜராத்தில கிர்னாரில் உள்ள அசோகரால் நிறுவப்பட்ட ஒரு கல்வெட்டில் தான் முதல் முதலா கி.பி. 150ல சமஸ்கிருத மொழியில ஒரு

செய்தி பொறிக்கப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப் பட்டது. அதுல பொறிக்கப்பட்ட எழுத்தும் தமிழ் பிராமி எழுத்திலதான். சமஸ்கிருதத்துக்குன்னு சொந்தமா எந்த ஒரு எழுத்து வடிவமும் இன்னிக்கு வரை இல்லை.

தமிழ் கிரந்த வட்டெழுத்துக்களிலிருந்து உருவான தேவநாகிரி எழுத்துக்களைத்தான் இன்றும் சமஸ்கிருத மொழி பயன்படுத்துகிறது. மேலும் தமிழ் பேசுகிறவன் தமிழன். மலையாளம் பேசுறவன் மலையாளி. சமஸ்கிருதம் பேசுறவன் யாரு? சமஸ்கிருதம் யாரோட தாய்மொழியும் இல்லை. சமஸ்கிருதம் திராவிடர்களால் உருவாக்கப்பட்ட ஒரு code language மாத்திரமே.

தமிழில் உள்ள திருக்குறள், பன்னிரு திருமறைகள், சிவஞான போதம் போன்ற சைவ சமய இலக்கியங்களையும், நாலாயிரம் திவ்யப்பிரபந்தம் போன்ற வைணவ இலக்கியங்களையும், அவைகளிலிருந்து உருவாகிய சமஸ்கிருத மொழியில் இருக்கிற வேத நூல்களையும், வேதாந்த நூல்களையும், பைபிளையும்,யூஸ் பண்ணி நற்செய்திப் பணி செய்யுறதே இந்தியாவுக்குப் பொருத்தமான ஒரு ஊழிய வழிமுறையாகும்னு பல கிறிஸ்தவ ஆய்வாளர்களும், சுவிசேஷ ஊழியர்களும் கருதுகின்றனர்.

ஸ்ரீதர் : இந்த கருத்துக்களை இன்னும் ஆழமா ஆய்வு செய்ய ஒரு இந்திய கிறிஸ்தவ பல்கலைக் கழகம் உருவாகணும். அதுக்காக நாங்க பல வருஷங்களா ஜெபிச்சிக்கிட்டு வர்றோம். ஜெபத்துடன் ஒரே மேய்ப்பனாகிய இயேசுவின் கீழ் ஒன்றிணைந்து செயல்பட்டு இந்தியாவை இயேசுவுக்கு சொந்தமாக்க இந்த பயிற்சி மையத்தை பயன்படுத்த உங்களை அன்போடு கேட்டுக்கிறேன்.

(அப்போது குமரேசன் காவி உடையில், நெற்றியில் திருநீறு, சந்தணம், குங்குமத்துடன் உள்ளே நுழைகிறார்)

குமரேசன்: **Praise the Lord Jesus, Sridhar.**

ஸ்ரீதர் : **Praise the Lord Jesus, Kumaresan.**

குமரேசன்: இன்னிக்கு என்னை மன்னிச்சுக்கோங்க ஸ்ரீதர். நான் சென்னைக்கு கிளம்பிட்டு இருக்கேன். அதுனால இன்னிக்கு நான் கிளாஸுக்கு வர முடியலை.

ஸ்ரீதர் : சென்னையில அப்படி என்ன அர்ஜெண்ட்டா?

குமரசேன்: அங்கே... பிரார்த்தனாலயாவிலிருந்து அழைச்சிருக்கா, அங்கே பிரார்த்தனாலயாவோட ஆண்டு விழாவாம். அங்கே நான் இயேசுவோட இரண்டாம் வருகையைப் பத்தி செய்தி கொடுக்கணுமாம்! நெறைய மாமா, மாமிமாரெல்லாம் ஆசையோடு காத்திண்டிருப்பா. உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமோ ஸ்ரீதர்?

ஸ்ரீதர் : என்ன குமரேசன்?

குமரேசன்: நான் லாஸ்ட் டைம் பிரார்த்தனாலயா போனப்போ அங்கே உள்ள பாஸ்டர் என்ன சொன்னார் தெரியுமோ?

ஸ்ரீதர் : என்ன சொன்னாங்க?

குமரேசன்: சமஸ்கிருத மொழியில எழுதப்பட்டிருக்கிறது எல்லாமே இயேசு கிறிஸ்துவைப் பற்றித்தான் நிறைய எழுதியிருக்கிறதா சொன்னார். நான் அதில கொஞ்சம் சுலோகங்களை கத்துண்டுட்டேன்.

ஸ்ரீதர் : எங்களுக்காக அதுல ஒரு பத்தெண்ணம் சொல்லுங்களேன்.

குமரேசன்: ஐயோ, லேட்டாயிடுச்சு. ஆனாலும் சொல்றேன். கவனமாய்க் கேளுங்க.

ஸ்ரீதர் : 1. ஓம் ஸ்ரீ பிரம்ம புத்திராய நமஹ: குமாரனாய் பிறந்த கடவுளின் குமாரனே உம்மை நமஸ்கரிக்கிறேன்.

2. ஓம் ஸ்ரீ கன்னி சுத்தாய நமஹ: கன்னியின் வயிற்றில் பிறந்தவரே உம்மை நமஸ்கரிக்கிறேன்.

3. ஓம் ஸ்ரீ தரித்திர நாராயண நமஹ: ஏழை கோலமாய் பிறந்தவரே உம்மை வணங்குகிறேன்.

4. ஓம் ஸ்ரீ ஸிபிலிஸ்தாய நமஹ: விருத்த சேதனம் பெற்றவரே உம்மை வணங்குகிறேன்.

5. ஓம் ஸ்ரீ விருட்ச சூல அருந்தாய நமஹ: சிலுவை மரத்தில் தொங்கியவரே உம்மை நமஸ்கரிக் கிறேன்.

6. ஓம் ஸ்ரீ பஞ்சகாயாய நமஹ: ஐந்து காயங்களை உடையவரே உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்.

7. ஓம் ஸ்ரீ மிருத்தம் ஜெயாய நமஹ: மரணத்தை வென்றவரே உம்மை நமஸ்கரிக்கிறேன்.

8. ஓம் ஸ்ரீ நமச்சிவாய நமஹ: அன்புடையவரே உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்.

9. ஓம் ஸ்ரீ மஹேஸ்வராய நமஹ: சர்வ வல்லவரே உம்மை நமஸ்கரிக்கிறேன்.

10. ஓம் ஸ்ரீ மஹாதேவாய நமஹ: எல்லா தேவர் களுக்கும் மகாதேவனான தேவாதி தேவனே உம்மை வாழ்த்துகிறேன். வணங்குகிறேன், ஸ்தோத்தரிக்கிறேன்.

லேட்டாயிடுத்து ஸ்ரீதர். மீதிய நான் அடுத்த வாரம் வந்து சொல்றேன். நான் அனந்தபுரி ரயில புடிக்கணும். எனக்காக வேண்டிக்கோங்க ஸ்ரீதர் பிரெய்ஸ் த லாட் ஜீசஸ், பை....

ஸ்ரீதர் : பை.

ஜான்சன் : யாரு இந்த இந்துச் சாமியார்? இவரும் இந்த வகுப்புக்கு வர்றாரா?

அ.ராஜ் : இவர் கிறிஸ்தவரா என்ன? Praise the Lord Jesus ன்னு சொல்றாரு.

ஸ்ரீதர் : இவர்தான் விவேகானந்தர் சொல்ற ஆதி இந்திய கிறிஸ்தவர். சென்னையில பிரார்த்தனாலயாங்கிற பேர்ல ஒரு திருச்சபை கூடுது. அதுல சிலபேரு காவியுடுத்தி, நெற்றியில ஆதி இந்திய கிறிஸ்தவ சமயக் குறிகளான திருநீறு, சந்தணம், சிந்தூரம் பூசியவாறு இந்திய ஆடைக் கலாச்சாரத்தோட உடை உடுத்திக்கிட்டு இயேசுவை ஆராதிக்கிறாங்க. சில பேர் மடிசார்ல, சில பேர் பஞ்சகச்சத்தில வர்றாங்க. எந்த தடையும் இல்லை.

எஞ்சல் : காவி உடை, நெற்றியில திருநீறு, சந்தணம், சிந்தூரம், இதுக்கும் கிறிஸ்தவத்துக்கும் என்ன சம்பந்தம்?

ஸ்ரீதர் : நண்பர்களே, திருநீறு எப்படி தயாரிப்பதுங்கிறதை உலகுக்கு கற்றுத் தந்ததே பைபிள் தான். எண்ணாகமம் 19ம் அதிகாரத்தை படிச்சுப் பாருங்க. இரத்தம் சிந்தி கொல்லப்பட்டு பாளையத்துக்கு புறம்பே எடுத்துச் செல்லப்பட்டு, சுட்டெரிக்கப்பட்ட சிவந்த கிடாரியின் சாம்பல் பாவத்தை பரிகரிக்கும் என்ற முறை பழைய ஏற்பாடு நம்பிக்கைதான் ஆதி இந்தியக் கிறிஸ்தவர்கள் நெற்றியிலும், உடலிலும் சாம்பல் பூசி தினமும் சுத்தி பெறச் செய்யுறதா நம்பி அதைக் கடைப்பிடிக்கிறாங்க. நெற்றியில பூசப்படும் சந்தணம் மரமாகிய சிலுவையையும், அதன் நடுவுல வைக்கப்படும் சிந்தூரம் இரத்தத்தையும் குறிக்கிறது. தூய்மையான வெள்ளைத் துணியை இரத்தத்தில் முக்கி எடுத்தால் வரும் நிறம்தான் காவி நிறம். இவைகளை எல்லாம் இன்னும் ஞாபகச் சின்னங்களாக வைத்து ஆதி இந்திய கிறிஸ்தவர்கள்

கடைப்பிடிக்கிறதின் அறிகுறி தான் குமரேசனின் இந்த சமயக்கோலம்.

குமரேசன் என்கிற பேரே அவரை கிறிஸ்தவர் என்றுதான் காட்டுது. குமரன் என்றால் குமரனாகிய இயேசு. ஈசன் என்றால் இரட்சகராகிய இயேசு, குமரேசன்னா குமாரனா வந்த இரட்சகரை ஏற்றுக் கொண்டவன் என்று பொருள். இந்த குமரேசன் இன்று சென்னையில் பிராமணராகப் பிறந்தும், கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொண்டு, பிரார்த்தனாலயா என்ற பெயரில் நடத்தப்படும் சபையில இயேசுவின் இரண்டாம் வருகையைக் குறிச்சு செய்தி கொடுக்கத்தான் போறாரு. இது இந்திய ஊழியத்துக்கு கிடைக்கும் ஒரு புதிய பார்வை இல்லையா?

இப்படி தோமா வழி வந்த ஆதி இந்திய கிறிஸ்தவ சத்தியங்களை விளக்கும் இந்திய சமய இலக்கியங்களையும், விவிலிய ஒளியில் பயன்படுத்தி இந்தியப் பண்பாட்டைப் பாதுகாத்து, ஐரோப்பிய கலாச்சாரத்துக்கு அடிமைப்படாம, இந்தியாவில ஊழியம் செஞ்சா இயேசு யார் என்று அறியாதிருந்தும் இயேசுவையே, ஆராதித்துக் கொண்டிருக்கும் பெரும்பான்மை இந்தியர்களை முழுமையாக கிறிஸ்தவத்துக்குள் வழி நடத்த குமரேசனைப் போன்றோரின் அறிவு நமக்கு மிகவும் பயன் தரும். அதுக்காகவே அவரும் நமது பயிற்சி மையத்தில் பங்கு பெற கர்த்தர் உதவி செய்திருக்கிறார்.

உங்களுக்கு இன்னமும் பல சந்தேகங்கள் நிச்சயமா இருக்கும். அடுத்த வாரம் அந்த சந்தேகங்களுக்கு பதில் தேடுவோம். இந்தியா ஒரு கிறிஸ்தவ நாடு. திருக்குறள் அடிப்படை கிறிஸ்தவமே என்ற நூல்களை படிச்சுட்டு உங்க கேள்விகளுடன் அடுத்தவாரம் வாங்க. இன்னிக்கு இத்தோட நாம

முடிச்சுக்கிடலாம். ஜெபக்குறிப்புகளைக் குறித்துக் கொள்ளுங்கள்.

1. அனைத்திந்திய கிறிஸ்தவர்களும் இணைந்து ஒரு கிறிஸ்தவ பல்கலைக் கழகம் ஆரம்பிச்சு இந்த புதிய உண்மைகளை, மேலும் ஆதாரபூர்வமா உலகுக்கு வெளிப்படுத்த,
2. இந்த கருத்துக்களை ஒலி, ஒளி பரப்பும் தொலைக்காட்சி நிலையங்கள் நிறுவப்பட,
3. வாலிபர்களும், சிறுவர்களும் இந்த ஊழியத்தில் புதுப்பார்வை அடைய,
4. இந்தியாவின் தேசிய பாவமான சாதி ஏற்றத்தாழ்வுக் கோட்பாடுகளிலிருந்து இந்தியத் திருச்சபையும், ஒட்டு மொத்த இந்தியர்களும் விடுதலை அடைய,
5. சபைப் பாகுபாடுகளைக் களைந்து இந்தியத் திருச்சபை ஒரே மேய்ப்பனாகிய இயேசுவின் கீழ் ஒரே மந்தையாகச் செயல்படவும் தினமும் உங்கள் ஜெபத்தில் இந்த குறிப்புகளுக்காக ஜெபியுங்கள்.

நண்பர்களே, ஒவ்வொரு வாரமும் இதே நாளில் இதே வேளையில் இந்த ஆலோசனைக் கூட்டம், வகுப்புகள் நடைபெறும். தவறாமல் கலந்து கொள்ளுங்கள். உங்கள் நண்பர்களையும் அழைச்சிட்டு வாங்க. எல்லோருக்கும் நன்றி. வணக்கம். பை பை. **Praise the Lord Jesus.**

அனாரிய சமாஜ் ஊழியங்கள் மூலமாக வெளியிடப்பட்டுள்ள / கிடைக்கின்ற புத்தகங்கள்/ VCD க்களின் பட்டியல்.

Anaryan Publications Book Stall, 22-A, Pattison Street. Nagercoil - 629 001.

CATALOGUE

Sl. No.	Author / Publisher / Title of Books	Books Rs.	CD Rs.	DVD Rs.
	M.Christopher எழுதிய நூல்கள்			
1.	பரிசுத்த வேதாகமத் துணை நூல்	120		
2.	கர்த்தரின் நாள்	60		
3.	இந்துத்துவாவிலிருந்து விடுதலை	80		
4.	குமரனாகிய இயேசு	85		
5.	திருக்குறள் கூறும் சான்றோரின் பண்புகள்	15		
6.	திருக்குறள் கூறும் இரட்சிப்பின் நற்செய்தி	15		
7.	திருக்குறள் தெளிவு	50		
8.	ஒரு புதையுண்ட வரலாறு	95		
9.	திருக்குறள் அடிப்படை கிறிஸ்தவமே-1	80		
10.	திருக்குறள் அடிப்படை கிறிஸ்தவமே-2	160		
11.	விவிலியப் பாதை	45		
12.	சாத்தானுடைய போராட்டங்கள்	55		
13.	திருக்குறள் காட்டும் மீட்கப்பட்டோர்	25		
14.	இந்தியாவின் ஆதிக் கிறிஸ்தவம்	25		
15.	திருக்குறள் ஓர் கண்ணோட்டம்	30		
16.	வருகைக்காக காத்திருக்கும் மணவாட்டி சபை	25		
17.	ஆதிக் கிறிஸ்தவமும் சைவமும் கூறும் ஒருவரே கடவுள்	70		
18.	Love Hindus	40		
	M.Sunder Yesuvadian எழுதிய நூல்கள் - IAS Publications			
19.	உலக மதங்களின் ஆய்வுப் பார்வையில் இந்தியா ஒரு கிறிஸ்தவ நாடு (மலையாளம்)	90		
20.	உலக மதங்களின் ஆய்வுப் பார்வையில் இந்தியா ஒரு கிறிஸ்தவ நாடு (தமிழ்)	100		

21.	உலக மதங்களின் ஆய்வுப் பார்வையில் இந்தியா ஒரு கிறிஸ்தவ நாடு (தமிழ்) சுருக்கநூல்	10		
22.	India is A Christian Nation (English) (Pre - revised)	50		
23.	Research on the History of World Religions reveals India is A Christian Nation (English) (revised)	75		
24.	திராவிடரும் திராவிட இந்தியாவும் (தமிழ்)	100		
25.	Dravidians & Dravidian India (English)	5		
26.	திராவிட இந்தியா ஒரு கிறிஸ்தவ ஆன்மீக நாடு	75		
27.	Sindusthan Times (Bullettin - 1)	5		
28.	Sindusthan Times (Bullettin - 2)	5		
	புத்தாய்வு நற்செய்தி நூல்கள்/ சிடிக்கள்			
	சுந்தர் யேசுவடியான் எழுதிய நூலைக்கள்			
29.	இந்தியா ஒரு கிறிஸ்தவ நாடு - பாகம் 1		30	50
30.	இந்தியா ஒரு கிறிஸ்தவ நாடு - பாகம் 2		30	50
31.	இந்தியா ஒரு கிறிஸ்தவ நாடு - பாகம் 3		30	50
32.	திராவிட இந்திய ஒரு கிறிஸ்தவ ஆன்மீக நாடு		30	50
33.	இந்தியாவில் சுவிசேஷம் பரவ நாம் செய்ய வேண்டியது என்ன? - கவி. தாயப்பன்		30	50
34.	இந்தியாவில் சுவிசேஷம் முழுமையாகப் பரவாதது ஏன்? - திருமதி ஆஷா ஸ்ரீதர்		30	50
35.	இந்தியாவில் சுவிசேஷம் முழுமையாகப் பரவாதது ஏன்? - கவி. தாயப்பன்		30	50
36.	சைவ - வைணவப் பாடல்கள் வழி நற்செய்திப் பணி - திருமதி ஆஷா ஸ்ரீதர்		30	50
37.	திருக்குறள் வழி நற்செய்திப் பணி - டாக்டர் ஜாஸ்மின் ஆசீர்		30	50
38.	தமிழ் சித்தர் பாடல்கள் வழி நற்செய்திப் பணி - Pr. Dr.R. தனராஜ்		30	50
39.	திராவிட இந்தியா ஒரு கிறிஸ்தவ ஆன்மீக நாடு - சுந்தர் யேசுவடியான்		30	50
40.	திராவிட இந்தியா ஒரு கிறிஸ்தவ ஆன்மீக நாடு: தலைவர் உரை - ஜேம்ஸ் ஆர்.டேனியல்		30	50
41.	இந்தியக் கிறிஸ்தவத்தின் ஒரு புதையுண்ட வரலாறு - எம். கிறிஸ்டோபர்		30	50
42.	தோமா வழி ஆதி இந்தியக் கிறிஸ்தவம் (சைவ - வைணவம்) - திருமதி ஆஷா ஸ்ரீதர்		30	50

43.	திருக்குறளில் மூவொருமைக் கோட்பாடு - டாக்டர் ஜாஸ்மின் ஆசீர்		30	50
44.	தமிழ் சமய இலக்கியங்களில் கிறிஸ்தவப் போதனைகள் - **Pr. R.** தனராஜ்		30	50
45.	இந்தியன் அனாரிய சமாஜ் ஊழியங்கள் பற்றிய உரையாடல்- ஆஷா ஜெனிட்டர்		30	50
46.	தோமா வழி ஆதி இந்தியக் கிறிஸ்தவம் - டாக்டர் பாஸ்கரதாஸ்		30	50
47.	குர்ஆன் இறை வேதமா? பைபிள் இறை வேதமா? - நாகர்கோவில் விவாதம்		30	50
48.	இந்திய சுவிசேஷ எழுப்புதலுக்கு ஒரு புதிய பார்வை - எம்.சுந்தர் யேசுவடியான்		30	50
49.	திராவிட இந்தியாவும் கிறிஸ்தவ சுவிசேஷ எழுப்புதலும் - டாக்டர் ஜேம்ஸ் ஆர்.டேனியல்		30	50
50.	திருக்குறளும் சுவிசேஷ எழுப்புதலும் - டி.ஆர்.ஜாஸ்மின் ஆசீர்		30	50
51.	தோமா வழி ஆதி இந்தியக் கிறிஸ்தவமும் சுவிசேஷ எழுப்புதலும் - ஆஷா ஸ்ரீதர்		30	50
52.	இந்திய சுவிசேஷ எழுப்புதலுக்கு இந்திய சமய இலக்கியங்களும், கிறிஸ்தவ உரிமைப் போராட்டங்களும் - பாசுகரதாஸ்		30	50
53.	இந்திய சுவிசேஷ எழுப்புதலுக்கு இந்திய சமய இலக்கியங்களும் கிறிஸ்தவ உரிமைப் பேராட்டங்களும் - **Pr.** தனராஜ்		30	50
54.	மார்த்தாண்டம் கருத்தரங்கு (ஆறு கருத்தரங்குகள்)		30	50
55.	ஐ.ஏ.எஸ். ஊழியக் கருத்துப் பாடல்கள் (பதினான்கு)		30	50
56.	திராவிட இந்தியர்களுக்கு ஒரு வேதாகமக் கையேடு - **Pr. M. Albert**	100		
57.	திராவிட இந்தியர்களின் ஆன்மீக மீட்பு - பாறை உடைக்கும் ஒரு தொழிலாளியின் சாட்சி	10		
58.	**Structural Analysis of Contemporary Christendom in India and Tools for Innovative Evangelism - Bro. Bino Johnson**	100		
	NILT புத்தகங்கள்			
59.	**Communicating Christ Through Hindu Religion**	20		
60.	**Trinity**	50		
61.	பிரம்ம சூத்திரா - விவிலிய ஒளியில்	20		

62.	**Dravidian Philosophy**	20			
63.	**Six Darsanas and Christianity**	20			
64.	**Bhrama Shuthra And Christianity**	20			
65.	**Vaishnavism and Christianity**	20			
66.	**Development of Civilization and Religions in India and Its influence on the World Society**	20			
67.	இந்திய நாட்டின் ஆதி கிறிஸ்தவ வரலாறு	5			
68.	தோமா வழி ஆதி இந்தியக் கிறிஸ்தவம்	50			
	கவி. எஸ்.தாயப்பன் எழுதி வெளியிட்ட நூல்கள் / சீடிக்கள்				
69.	தெய்வீக சுகம் உண்டா?	10			
70.	என் அழுகையும் ஆனந்தப் புது வாழ்வும் (தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம், ஆங்கிலம், ஹிந்தி, ஒடிசா மொழியில்)	10			
71.	சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள்	10			
72.	பாவத்தின் சம்பளம் நரகம்	10			
73.	இயேசு கிறிஸ்து உங்களோடு பேசுகிறார்	10			
74.	கிறிஸ்தவர்களுடைய 100 சந்தேகங்களுக்குப் பதில்	10			
75.	என் ஊழியக்காரனே!?	10			
76.	இந்தியாவுக்கு இயேசு தேவை. ஏன்?	10			
77.	சைவமும் வைணவமும் கிறிஸ்தவமே	10			
78.	நீங்களே எனக்கு சாட்சிகள்	10			
79.	உண்மையான கடவுள் யார்?	10			
80.	அற்புத சுகமளிக்கும் வைத்தீஸ்வரர் இயேசு	10			
81.	இந்தியாவில் ஏன் சுவிசேஷம் முழுமையாகப் பரவவில்லை?	10			
82.	கத்தோலிக்கர்களின் கனிவான கவனத்திற்கு (பாகம் 1)	10			
83.	கத்தோலிக்கர்களின் கனிவான கவனத்திற்கு (பாகம் 2)	10			
84.	நிறைவேறின தீர்க்க தரிசனங்கள் (பாகம் 1)	10			
85.	நிறைவேறின தீர்க்க தரிசனங்கள் (பாகம் 2)	10			
86.	கிறிஸ்துவை எதிர்ப்பதின் விளைவு	10			
87.	அரிய வேதம் அறிய வேண்டிய வேதம்	10			
88.	ஆனந்தப் புதுவாழ்வு கண்டேன்	5			
89.	இந்திய வேதங்களில் இயேசு கிறிஸ்து - பாகம் 1	10			
90.	இந்திய வேதங்களில் இயேசு கிறிஸ்து - பாகம் 2	10			
91.	நித்திய ஜீவன் தரும் நிகரில்லா இயேசு	5			

92.	கிறிஸ்தவர்களைக் குறித்து இந்துக்களின் பொதுவான கேள்வியும் பதிலும் (பாகம் 1)	10	
93.	கிறிஸ்தவர்களைக் குறித்து இந்துக்களின் பொதுவான கேள்வியும் பதிலும் (பாகம் 2)	10	
94.	விவிலியமும் விஞ்ஞானமும்	10	
95.	எச்சரிக்கை எச்சரிக்கை 666	5	
96.	பைபிளின் இரத்தினச் சுருக்கமும் இயேசுவின் இரண்டாம் வருகையும்	10	
97.	ஜெகோவா விட்னஸின் உபதேசமும் அதற்கு பைபிளின் பதிலும் கேள்வியும் - பாகம் 1	10	
98.	ஜெகோவா விட்னஸின் உபதேசமும் அதற்கு பைபிளின் பதிலும் கேள்வியும் - பாகம் 2	10	
99.	இஸ்லாமியர்களின் கேள்விகளுக்கு பதில்	5	
100.	திருக்குறள் கூறும் இரட்சிப்பின் நற்செய்தியும் திருச்சபையின் நற்பண்புகளும்	10	
101.	நாலு வேதங்களின் நாயகர் இயேசுவே	5	
102.	பரலோகம் செல்ல எளிதான வழி	10	
103.	கர்நாடகாவிற்காக கதறி அழும் கல்வாரி ஜெபக் குழுவும் இராணுவ சகோதரர்களின் ஜெபக் குழுவும்	5	
105.	ஓர் அவசர அறைகூவல்	5	
106.	பைபிளில் நிறைவேறிய தீர்க்க தரிசனங்கள் - பாகம் 3	10	
107.	சிலை வணக்கம் சின்னாபடுத்தியதே	10	
108.	ஜெகோவா விட்னஸ்காரர்களுக்கு சத்தியத்தை அறிவிப்பது எப்படி - பாகம் 1	10	
109.	ஜெகோவா விட்னஸ்காரர்களுக்கு சத்தியத்தை அறிவிப்பது எப்படி - பாகம் 2	10	
110.	திரித்துவம்	5	
111.	பாவப் பரிகாரியின் பங்கமில்லா அங்கங்கள் - பாகம் 1	10	
112.	பாவப் பரிகாரியின் பங்கமில்லா அங்கங்கள் - பாகம் 2	10	
113.	ஆரோக்கிய வாழ்வுக்கு ஒரு தெய்வீக அமைப்பு	10	
114.	இது உயிர்காக்கும் முயற்சி	2.50	
115.	வட இந்தியர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க உன்னத அழைப்பு	2.50	
116.	**VCD** என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (தமிழ், கன்னடம், மலையாளம், ஹிந்தி)		10
117.	**VCD** எழுந்து கட்டுவோம்		10
118.	**VCD** முக்திக்கு வழி கிறிஸ்தவமே		10

119.	VCD சைவமும் வைணவமும் கிறிஸ்தவமே - கதாகாலட்சேபம்		10	
120.	VCD தேசம் சந்திக்கப்படணுமே கர்த்தாவே		10	
	மக்னாயீம் ஊழியங்கள் Pr. R. Dhanaraj			
121.	இனி சம்பவிப்பது என்ன?	100		
122.	மிகப் பெரிய வரலாற்றுப் பிழை		50	
123.	மாபெரும் மாற்றம்		50	
124.	மாபெரும் செயல்பாடு		50	
125.	விடுதலை		50	
126.	மனித நேயம்		50	
127.	கர்த்தர் யார்?		50	
128.	ஏன் கர்த்தரை பின்பற்ற வேண்டும்?		50	
129.	கர்த்தரை எவ்விதம் பின்பற்ற வேண்டும்?		50	
130.	இந்திய எழுப்புதலும் நற்செய்தி அறிவிக்கும் முறையும்		50	
131.	தேவ எழுப்புதலுக்கு எதிரான சட்டங்கள்		50	
132.	கிறிஸ்துவின் சிலுவை		50	
133.	மக்னாயீம் பாடல்களும் செய்தியும்		50	
	PRARTHANALAYA			
134.	சத்தியத்தைத் தேடி **(Asathoma Satgamaya)**			100
135.	ஒளியைத் தேடி **(Tamasoma Jyotirgamaya)**			100
136.	சத்தியத்தைத் தேடி **(Asathoma Satgamaya (Malayalam)**			100
	DR. M. IMMANUEL			
137.	**St. Thomas in India**	70		
138.	**Kanyakumari, Aspects and Architects**	130		
139.	**Dravid Aur Dravidsthan (Hindi) - S.L. Sagar**	50		
140.	வாழ்வியல் சிந்தனை - எஸ்.எல்.சாகர்	50		
141.	இந்தியா தோமா வழி திராவிட கிறிஸ்தவ நாடே - எவ்வாறு? **- M. Deivanayagam & Dr. M. Devakala**	150		
	DR. DHAYALAN			
142.	பலிகள், சிறையா? சிலையா? அவதார நாயகன்			100
143.	பாபேல் கோபுரம்			100
144.	செருபாபேல் ஆலயம்			100
145.	மறைக்கப்பட்ட சரித்திரம்			100
146.	ஆசரிப்புக் கூடாரம் (மறைந்திருக்கும் சத்தியங்கள்)			100
147.	தேவாலயம் (சாலொமோன்)			100
148.	நம்பிக்கையும் குற்றங்களும்			100

இந்தியாவில் ஒரு கிறிஸ்தவ பல்கலைக்கழகம் ஏன் தேவை?

மன்னர் ஆட்சிக் காலத்தில் கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் தோன்றி கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் செயலிழந்து போனது பீஹார் மாநிலத்திலுள்ள அன்றைய உலகப் புகழ் பெற்ற 'நாளந்தா பல்கலைக்கழகம்.' கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் உருவான புத்த, சமண மதங்களின் கருத்தோட்டம் இருந்தாலும், நாளந்தா பல்கலைக் கழகத்துக்கு ஆதி இந்தியக் கிறிஸ்தவ தத்துவங்களின் தாக்கங்களும் இருந்திருக்கத்தான் வேண்டும். ஏனெனில், கி.பி. 49 முதல் கி.பி. 72 வரை, தூய தோமா அப்போஸ்தலரின் ஊழியத்தின் தாக்கத்தால் நாத்திகக் கொள்கையுள்ள ஹீனயான புத்த மதம் ஆத்திகக் கொள்கையுள்ள மஹாயான புத்த மதமாகவும், நாத்திகக் கோட்பாடுள்ள திகம்பர சமண மதம் ஆத்திகக் கொள்கையுள்ள ஸ்வேதாம்பர சமண மதமாகவும் கி.பி. முதல் நூற்றாண்டில் உருமாறின என்பது வரலாறு.

மன்னர் ஆட்சிக் காலங்களுக்குப் பின் மக்கள் ஆட்சி கால ஆரம்பத்தில் கிறிஸ்தவ சிந்தனைத் தாக்கமுள்ள ஐரோப்பிய காலனி ஆட்சிக் காலத்தில் கி.பி.19-ஆம் நூற்றாண்டில் கொல்கத்தாவிலும் (1857), சென்னையிலும் (1857), மும்பையிலும் (1857) மற்றும் டில்லியிலும் (1922) நான்கு பல்கலைக் கழகங்கள் தொடங்கப்பட்டன. இந்தப் பல்கலைக் கழகங்களில் பயின்று அறிவியலில் தேறிய இந்திய மக்கள், இந்தியா சுதந்திரம் அடைந்த பின், தங்கள் சமயம் சார்ந்த மக்களின் மேம்பாட்டுக்காக பல பல்கலைக் கழகங்களை ஆரம்பித்து நடத்தி வருகின்றனர்.

தற்போது (1) மத்திய அரசின் கீழ் (2) மாநில அரசின் கீழ் (3) தனியார் பொறுப்பில் என மூன்று வகையான பல்கலைக் கழகங்கள் இந்தியாவில் செயல்படுகின்றன.

2009 ஆம் ஆண்டில் மொத்தமாக மொழி, விஞ்ஞானம், கலை, சமூக அமைப்பு, வரலாறு, தொழில் நுட்பம் போன்ற பல துறைகளில் ஆய்வு மற்றும் பயிற்சி வழங்கும் 573 பல்கலைக் கழகங்கள் இந்தியாவில் செயல்படுகின்றன என புள்ளி. விவரங்கள் கூறுகின்றன.

ஐரோப்பியரின் காலனி ஆட்சிக் காலத்தில் வில்லியம் கேரியால், மேற்கு வங்காளம், செராம்பூரில் ஆரம்பிக்கப்பட்ட செராம்பூர் (கல்லூரி) பல்கலைக் கழகம் (1829) தனிச் சிறப்புப் பெற்றதாகும். பொதுக் கல்விக்காக ஆரம்பிக்கப்பட்ட செராம்பூர் கல்லூரி கிறிஸ்தவ சமயக் கல்விக்கு ஒரு பல்கலைக் கழகமாக செயல்பட்டு வருகிறது. ஆனால் அது ஐரோப்பியக் கலாச்சாரத்தை ஒட்டிய கல்வி மற்றும் ஆய்வுத் திட்டங்களையே கடைப்பிடிக்கின்றது.

சுதந்திர இந்தியாவில் திரு. மதன்மோகன் மாளவ்வியாவால் வாரணாசி மாவட்டத்தில் (உ.பி) ஆரம்பிக்கப்பட்ட பனாரஸ் இந்து பல்கலைக் கழகம் (1916) ஹிந்துக்களின் தலைமைத்துவத்தையும், அலிகாரில் (உ.பி) திரு. செய்யத் அஹ்மத்கான் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட அலிகார் முஸ்லிம் பல்கலைக் கழகம் (1920) இஸ்லாமியரில் தலைமைத்துவத்தையும் உருவாக்க மிகவும் பயனளித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. சுதந்திர இந்தியாவின் கிறிஸ்தவர்களின் தேசியத் தலைமைத்துவத்தை உருவாக்க வழிவகுக்கும் ஒரு தேசியக் கிறிஸ்தவ பல்கலைக் கழகம் இல்லை என்ற குறை இந்தியக் கிறிஸ்தவர்களை சிந்திக்க வைக்க வேண்டும்.

சென்னை பல்கலைக் கழகத்தின் கீழ் செய்யப்பட்ட பல **Ph.D.** ஆய்வேடுகளின் வெளிச்சத்தில் இந்தியாவின் சைவ - வைணவ மதங்களாகிய இந்து மதம் ஆதி இந்தியக் கிறிஸ்தவத்தின் கிளைகளே என்று நிரூபிக்கப்பட்டுள்ள பின்னணியில், இந்த ஆய்வுகளுக்கு வலுவூட்டும் வகையில் ஒரு இந்தியக் கிறிஸ்தவப் பல்கலைக் கழகம் நிறுவப்பட வேண்டும் என்பது தவிர்க்க முடியாத ஒரு தேவையாய் அமைந்துள்ளது.

ஆதி இந்தியக் கிறிஸ்தவர்களாகிய சைவ - வைணவர்கள், ஆரியரின் இந்துத்துவக் கோட்பாடுகளுக்கு அடிமைப்பட்டுள்ள தால், அவர்கள் இந்த முயற்சிக்கு கை எடுப்பார்கள் என எதிர்பார்ப்பது அரிது. ஆய்வு அடிப்படையில் தெளிவு பெற்ற ஐரோப்பிய வழி வந்த கிறிஸ்தவர்களாகிய, இன்றைக்கு 3 கோடி இந்தியக் கிறிஸ்தவர்களாகிய நாம்தான் இந்த மாபெரும் முயற்சிக்கு வழிகாட்ட வேண்டும். ஆயிரக்கணக்கான டினாமினேஷன்ஸ் ஆகப் பிரிந்து கிடக்கும் இந்தியக் கிறிஸ்தவர்களின் ஒற்றுமைக்கு இந்தப் பல்கலைக் கழகம் அமைக்கும் முயற்சி வழிவகுக்கும். வரலாற்றுத் தெளிவுடன் நற்செய்திப் பணி செய்ய வலுவுள்ள கிறிஸ்தவத் தலைமைத்துவத்தை இந்தப் பல்கலைக் கழகம் உருவாக்கும் என வில்லியம் கேரி கூறியது போல, கர்த்தருக்காக பெரிய காரியங்களைச் செய்வோம், கர்த்தரிடமிருந்து பெரிய காரியங்களை எதிர்பார்ப்போம்.

ஜெபிப்போம், இணைந்து முயல்வோம். கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்.

இந்தியன் அனாரிய சமாஜ் ஊழியங்கள்

இப்படி ஒரு ஊழியம் தேவையா?

'வரங்களில் வித்தியாசங்கள் உண்டு. ஆவியானவர் ஒருவரே. ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு. கர்த்தர் ஒருவரே. கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு. எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே' (1 கொரிந்தியர் 12:4-6) ஆமென். எனவே இந்தியாவுக்கு இப்படியும் ஒருஊழியம் நிச்சயம் தேவை. இது நம் காலத்தின் கட்டாயம்.

ஆரம்பம்

'சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்' என்பது (யோவான் 8:32) கிறிஸ்துவின் வாக்குறுதி, இந்தியாவில் நற்செய்திப் பணி வெற்றி பெற்று இந்திய மக்கள் முழு விடுதலை பெறுவதற்கு, நற்செய்திப் பணி செய்யும் அனைவரும் பரிசுத்த வேதாகம சத்தியங்களையும், இந்தியாவைப் பற்றிய முழு சத்தியங்களையும் இந்தியச் சமயங்களையும் பற்றி அறியக் கடமைப்பட்டுள்ளோம்.

இந்திய மக்களை, இரண்டு வகையான சித்தாந்தங்கள் ஆட்கொண்டு செயல்படச் செய்கின்றன. இவற்றில் முதல் வகைப்பட்டது 'யாதும் ஊரே யாவரும் கேளீர்', 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்', 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்', 'வாய்மையே வெல்லும்', 'தேவன் அன்பாகவே இருக்கிறார் (அன்பே சிவம்) என்ற கருத்துக்கள் அடங்கிய இந்தியாவின் ஆதி குடி மக்களாகிய, திராவிடர்களின் சித்தாந்தம். இதற்கு நேர் முரணானது. பிற்காலங்களில் திணிக்கப்பட்ட, 'மனிதன், தனது முன் ஜென்ம கர்ம வினையால், பிறப்பிலேயே உயர் சாதியாகவும், கீழ் சாதியாகவும் பிரிக்கப்பட்டவன்' எனக் கூறும் மக்களைப் பிரித்தாளும், ஆரியரின் அரசியல் சித்தாந்தம். இந்த இரு சித்தாந்தங்களின் வரலாற்றையும் உள் நோக்கங்களையும் புரிந்தால் மட்டுமே இந்தியாவில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பயனளிக்கும் வகையில் அறிவிக்க இயலும்.

வருணாசிரம தர்மம் என்ற சாதியேற்றத் தாழ்வுக் கோட்பாடு

தீண்டாமை, கோவில் பூசை நடத்த பிராமணரல்லாதோருக்குத் தடை, கீழ்ச்சாதிப் பெண்களுக்கு மார்பு மறைத்து ஆடை அணியத் தடை, கீழ் சாதியினருக்கு ஆலய நுழைவுத் தடை, நகை அணியத் தடை, காலணிகள் அணியத் தடை, நல்ல ஆடை அணியத் தடை, சொத்து சேர்க்கத் தடை, கல்வி கற்கத் தடை, வேதம் படிக்கத் தடை, வீடு கட்டத் தடை, தங்களுக்குத் தாங்கள் விரும்பும் பெயர் வைக்கத் தடை, தலைவரி, மர வரி, மார்பு வரி போன்ற பல நீசத்தனமான வரிக் கொடுமைகள், வரிசெலுத்த இயலாதோரை சித்திரவதை செய்து வரி வசூலித்தல், கூலி தராமல் ஊழியம் செய்யக் கட்டாயப்படுத்தல், தேவதாசிக் கலாச்சாரம், வரதட்சணைக் கொடுமை, விதவைகளை உடன் கட்டை யேற்றுதல், குழந்தைத் திருமணம், கலப்புத் திருமண எதிர்ப்பு, பெண் சிசுக் கருச்சிதைப்பு, பெண்ணடிமைத்தனம், ஆணாதிக்க சமூக அமைப்பு போன்றவை இந்தியாவிலுள்ள, ஆரியரின் சமயம் சார்ந்த, வருணாசிரம தருமம் என்ற சமூக அநீதிகளாகும்.

வேறெந்த நாடுகளிலுமில்லாத இந்த அநீதிகளை, இந்தியாவின் தேசிய பாவங்கள் என்றே கூறலாம். இவைகளால் அனைத்து இந்தியர்களும் ஒரு வகையான மன நோயாளி களாக்கப்பட்டு விட்டனர். ஆரியரின் வருகைக்கு முந்தைய திராவிட - சமூக அமைப்பில் இந்த நோய்கள் இல்லாமலிருந்தன. இந்தத் தேசிய பாவங்களுக்கு ஆரியர் வழங்கிய சமயப் பெயர் மனு தர்மம் என்பதாகும். இந்த ஆரியச் சமூகச் சூழலின் அழுத்தத்தால், இன்றைய கிறிஸ்தவர்களும் சாதிக் கோட்பாடு மற்றும் வரதட்சணை போன்ற மன நோய்களுக்கு அடிமைப்பட்டே வாழ்கின்றனர். தங்கள் மரபணுக்களில் கூட இந்த மன நோய்கள் உறைந்து விட்டன.

இந்தியன் அனாரிய சமாஜ் அறக்கட்டளை

இந்த மனுதர்மக் கொடுமையால் மனித உரிமைகள் மறுக்கப்பட்டு, அடிமைகளாக மக்கள் வாழ்ந்த அன்றைய கேரளாவில் (இன்றைய குமரி மாவட்டம்), 1932 ஆம் ஆண்டில் பிறந்தவர் திரு. எம்.சுந்தர ஏசுவடியான், தனது 16வது வயதில், கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டதால், தான் பெற்ற

ஆன்மீக மற்றும் சமூக விடுதலையை தன் தேச மக்கள் அனைவரும் அனுபவிக்க வேண்டும் என விரும்பினார்.

மேலே கூறப்பட்டவைகள் உள்ளிட்ட தேசிய பாவங்களை, வரலாற்று அடிப்படையிலும், விவிலிய ஒளியிலும் ஆய்வு செய்து, சமய சீர்திருத்தங்கள் அமலாக்கம் செய்ய வழி வகுக்கும் ஆய்வு நிறுவனங்களை உருவாக்கும் முக்கிய குறிக்கோளுடன், 1990 ஆம் வருடம் திரு.யேசுவடியான் அவர்களால் இந்தியன் அனாரிய சமாஜ் அறக்கட்டளை, ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாக பதிவு செய்யப்பட்டது. இந்தியாவின் பல மாநிலங்களிலுள்ள, பல சமயங்களைச் சார்ந்தவர்களும், அந்நாட்களின் OBC/ SC/ ST/ Minorities வகுப்பினர்களின் தேசியத் தலைவர்களுமாயிருந்த சவுதரி பிரம்மப் பெர்காஷ் (முன்னாள் மத்திய அமைச்சர்), திரு. கன்ஷிராம் (பகுஜன் சமாஜ் கட்சி நிறுவனர்) உள்ளிட்ட பல சிந்தனையாளர்களும் சமூக சீர்திருத்தவாதிகளும் உறுப்பினர்களாக இருந்தனர்.

பல நூற்றாண்டுகளாக, இந்தியாவை அடிமைப்படுத்தி யிருக்கும் இந்த சமயம் சார்ந்த, சமூக அநீதிகளை நீக்க முன்வந்த அநேக இயக்கங்கள், போதிய வெற்றி அடையாத நிலையில், இந்த அறக்கட்டளையின் செயல்பாடுகளும் 2003 ஆம் ஆண்டு வரை தனது முயற்சிகளுக்கு எதிர்பார்த்த முன்னேற்றமின்றியே காணப்பட்டது.

திருப்பம்

தனது இனத்தாராகிய **'இஸ்ரவேலர் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே பவுலடியாரின் விருப்பமும் விண்ணப்பமுமாயிருந்தது'** (ரோமர் 10-1) என்பதற்கிணங்க, இயேசு கிறிஸ்து வழங்கும் ஆன்மீக விடுதலையும் இந்தியாவின் ஆதி குடிமக்களாகிய 90 விழுக்காடு திராவிடரின் இன விடுதலையும் இணைந்து செயல்பட்டாலொழிய இந்தியாவின் பெரும்பான்மை மக்களின் முழுமையான ஆன்மீக மற்றும் சமூக விடுதலைக்கு வாய்ப்பு இல்லை என்ற உண்மையை உணர்ந்ததால், 2004 ஆம் ஆண்டு முதல், இந்த அறக்கட்டளை, கிறிஸ்தவ ஆன்மீக விடுதலை இயக்கத் தொண்டு நிறுவனமாக திருத்தி அமைக்கப்பட்டு அதன் செயல்பாடுகள் இந்தியன் அனாரிய சமாஜ் ஊழியங்கள் என்ற பெயரில் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தியாவுக்கு கிறிஸ்தவத்தைக் கொண்டு வந்த முக்கிய, மூன்று பிரிவுகள்

1. கி.பி.முதல் நூற்றாண்டில் (49-72) நற்செய்திப் பணிக்காகவே இந்தியா வந்த இயேசுவின் நேரடி சீடரான தூய தோமா அப்போஸ்தலர்.
2. கி.பி. 4-ஆம் நூற்றாண்டில், சிரியா தேசத்தில் கிறிஸ்தவர்களுக்கெதிராக எழும்பிய துன்பங்களைத் தாங்க இயலாமல் தப்பி ஓடி கேரளாவில் அடைக்கலம் தேடி வந்த சிரியன் கிறிஸ்தவர்கள்.
3. கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வணிகம் செய்யவும் நாட்டைப் பிடித்து ஆட்சி செய்யவும் வந்த ஐரோப்பிய கிறிஸ்தவர்கள்.

இந்த மூன்று பிரிவுகளில், தோமா அப்போஸ்தலரைத் தவிர மற்ற இரு வகுப்பினரும், இந்தியாவுக்கு வந்ததின் முக்கிய நோக்கம் நற்செய்திப் பணி புரிவது அல்ல என்று நாம் அறிவோம். ஆனால் நற்செய்திப் பணிக்காகவே வந்து, அன்றைய தமிழகத்தில் நற்செய்தி பரப்பி, ஏழுக்கு அதிகமான ஆலயங்களைக் கட்டி, பின்னர் சென்னையில் இரத்த சாட்சியாக மரித்த தோமா அப்போஸ்தலரின் பணிகளின் தாக்கங்கள் மற்றும் வளர்ச்சிகள் பற்றி இந்தியக் கிறிஸ்தவ இறையியல் கல்லூரிகள் ஆய்வு செய்து வெளிக்கொண்டு வரவோ, அது குறித்து விரிவான விளக்கங்களை இறையியல் கல்விப் பாடங்களில் வழங்கவோ செய்யவில்லை என்பது வேதனைக்குரிய உண்மை. இதன் விளைவாக, இந்தியக் கிறிஸ்தவர்களின் பட்டியலில், கி.பி.4 ஆம் நூற்றாண்டுகளில் அடைக்கலம் தேடி வந்த சிரியன் கிறிஸ்தவர்களும், அதன் பின் நூற்றாண்டுகளில் அடைக்கலம் தேடி வந்த கிறிஸ்தவர்களும், 16 ஆம் நூற்றாண்டுக்குப் பின் ஐரோப்பியர் வழி வந்த உள்நாட்டுக் கிறிஸ்தவர்களும் மட்டும் இடம் பெறுகின்றனரேயல்லாமல், முதல் நூற்றாண்டு முதல் இந்தியாவில் உருவான தோமா வழி வந்த ஆதி இந்தியக் கிறிஸ்தவர்கள் இடம் பெறவில்லை.

கி.பி. முதல் நூற்றாண்டில் புனித தோமாவால் கட்டப்பட்டு, இன்றுவரை, காக்கப்படும் மிகவும் பழமையான கிறிஸ்தவக்

கோயில் ஒன்று தமிழகத்திலுள்ள அன்றைய சேர நாட்டின் தலைநகரமான திருவிதாங்கோடு என்ற ஊரிலும், மற்றும் ஏழு கோவில்கள் இன்றைய கேரளாவிலும் இன்றும் இயங்குகின்றன என்பதும் தோமாவின் கல்லறையும் அவர் பெயரில் உள்ள ஆலயமும் சென்னையில் உள்ளன என்பதும் இந்தியக் கிறிஸ்தவத்தின் தொன்மையையும் தனிச் சிறப்பையும் விளக்குகிறது.

ஊழியங்களும் பெயர்களும்

ஐரோப்பியர்களால், ஐரோப்பியக் கலாச்சாரத்தில் நிறுவப்பட்ட பெரும்பாலான ஊழிய அமைப்புகளுக்கும் போர் முறைகளுக்குப் (war strategy) பயன்படுத்தப்படும் சொற்களே கையாளப் படுவதைக் காணலாம். உதாரணமாக **Roman Catholic Mission, London Mission, Lutheren Mission, Danish Mission, German Mission, American Mission, Salvation Army, Every Home Crusade, Campus Crusade, Operation Mobilisation** போன்ற சொற்களின் தொனியை கவனித்தால் இந்த உண்மை புரியும். அது ஒருவேளை அவைகள் நிறுவப்பட்ட காலத்தின் கட்டாயத்தாலோ, நிறுவியவர்களின் அரசியல் கலாச்சாரத்தின் தாக்கத்தாலோ அப்படிப்பட்ட சொற்கள் பயன்படுத்தப் பட்டிருக்கலாம். இதற்கு மாறாக, இந்தியக் கிறிஸ்தவர்கள் நடத்தும் ஊழியங்களுக்கு 'இயேசு விடுவிக்கிறார்', 'இயேசு அழைக்கிறார்', 'இயேசு வாழ்வளிக்கிறார்', 'இயேசு நேசிக்கிறார்' போன்ற சொற்கள் பயன்படுத்தப்படுவதைக் காணலாம். இந்த இரு ஊழிய அணுகுமுறைகளைக் கூர்ந்து கவனித்து, தங்கள் வரலாறு தெரியாமல், அறிவுக் குருடராகவும், கட்டுண்டவர்களாகவும் அடிமைப்பட்டுக் கிடக்கிற இந்தியாவின் பெரும்பான்மை மக்களின் ஒட்டுமொத்த, ஆன்மீக மற்றும் சமூக விடுதலைக்குப் பொருத்தமான ஒரு புதிய ஊழிய அணுகுமுறை தேவை எனக் காண்கிறோம்.

ஏன் இந்தப் பெயர்? யார் இந்த அனாரியர்?

அனாரியர் (Anaryas) என்றால் ஆரியரல்லாதோர் (Non - Aryans, i.e. pre - Aryans) என்று பொருள். அதாவது ஆரியரின் படையெடுப்புகளுக்கு முன் இந்தியாவின் ஆதி குடி மக்களாக வாழ்ந்து, இந்தியாவை ஆட்சி செய்து வந்த திராவிட மக்களே இந்த அனாரியர்கள். அவசியம் என்ற சொல்லின் எதிர்ச் சொல்

அனாவசியம் என்பதைப் போல, ஆரியன் என்ற சொல்லின் எதிர்ச் சொல் அனாரியன். ஆங்கில அகராதியில், ஆரியன் (Arya) என்ற சொல்லுக்கு மேல் மக்கள் (noble) என்றும், அனாரியன் (Anarya) என்ற சொல்லுக்கு கீழ் மக்கள் (ignoble) என்றும் விளக்கம் வழங்கப்பட்டுள்ளது. பகவத் கீதை இரண்டாம் அத்தியாயம் இரண்டாம் சுலோகத்தில் அனாரியர்கள் மோட்சத்துக்குத் தகுதியில்லை (Aswargyam) என்றும், எந்த மேன்மைக்கும் தகுதியில்லை (Akeerthikaram) என்றும் விளக்கம் காணலாம்.

இந்தியாவின் ஆதி குடிமக்களாகிய இந்த 90 சதவீதம் பெரும்பான்மையினரை, பிற்படுத்தப்பட்டோர் (52 சதம்), தாழ்த்தப்பட்டோர் (15 சதம்) பழங்குடியினர் 17 சதம்), சமய சிறுபான்மையினர் (16 சதம்) எனப் பிரித்து, படையெடுத்து வந்தேறிய 10 சதம் ஆரியர்கள், கடந்த பல நூற்றாண்டுகளாக, இந்துத்துவம் என்ற ஆரிய மதப் போர்வையில் அடிமைப் படுத்தியுள்ளனர். தாங்கள் அடிமைகளாக வாழ்கின்றனர் என்று உணரக் கூட இயலாத அளவுக்கு குருடராக்கப்பட்டும், சமூக அநீதிகளால் கட்டப்பட்டும்,இருதயம் நொறுங்குண்டும் அனாரிய இந்தியர்கள் வாழ்கின்றனர்.லூக்கா 4 ஆம் அதிகாரம் 18-20 வசனங்களில் கிறிஸ்து மனிதனாக அவதரித்ததின் நோக்கத்தை, கட்டுண்டவர்களை விடுவிக்க வந்த அவரே எடுத்து விளக்குகிறார்.

இஸ்ரவேல் மக்களின் வரலாற்றில் தங்கள் ஆட்சியையும், எருசலேமில் சென்று ஜீவனுள்ள தேவனை ஆராதிக்கும் உரிமையையும், பறிகொடுத்த சமாரியரைப் போல, இந்திய நாட்டுக்குச் சொந்தக்காரர்களாகிய அனாரிய மக்கள் தங்கள் நாட்டையும் ஆட்சியையும், கடவுளை ஆராதிக்கும் உரிமைகளையும் பறிகொடுத்தவர்களாக அடிமைப்பட்டுக் கிடக்கின்றனர். அவர்கள் பிற்பட்டவர்கள் அல்லர்.

மாறாக, பிற்படுத்தப்பட்டவர்கள் தாழ்ந்தவர்கள் அல்லர். மாறாக தாழ்த்தப்பட்டவர்கள், உலகின் மிகத் தொன்மையானதும், குமரிக் கண்டம் முதல் ஹரப்பா மொஹஞ்ஜதாரோ எல்லைகளைத் தாண்டிப் பரந்து கிடப்பதுமான சிறந்த சிந்துவெளி நாகரிகத்தை உருவாக்கிய அனாரிய இந்தியருக்கு இயேசு வழங்கும் ஆன்மீக விடுதலை மிகவும் தேவை.

இந்தியாவில் கிறிஸ்தவம் பரவி, சுமார் 300 ஆண்டுகள் கடந்த பின் தான் ரோம நாட்டில் கிறிஸ்தவம் ஒரு அங்கீகரிக்கப்பட்ட மதமாகப் பரவி ஐரோப்பாக் கண்டமே கிறிஸ்தவ நாடுகளாயின. இயேசுவின் நேரடி சீடராகிய தூய தோமா அப்போஸ்தலர் இந்தியாவில் நற்செய்திப் பணி செய்து இரண்டாயிரம் வருடங்கள் தாண்டியும் இந்தியக் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை 2.3 விழுக்காடே (அஃபிஷியலாக) என்பது ஒரு கேள்விக்குறியாகவே உள்ளது.

நிச்சயமாக நமது ஊழியப் பாதையில் ஏதோ குளறுபடிகள் நுழைந்திருக்கின்றன. அவைகளைத் தேடிக் கண்டறிந்து நம் ஊழிய வழிமுறைகளை வரலாற்றுத் தெளிவுடன் புதுப்பித்தல் மிக அவசியம். இந்த உண்மைகளை உணர்ந்து, உருவாகிக் கொண்டிருப்பதே இந்தியன் அனாரிய சமாஜ் ஊழியங்கள்.

வியப்பூட்டும் தகவல்கள்

இந்தப் பின்னணியில் பல வியப்பூட்டும் தகவல்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. சுவாமி விவேகானந்தர், ஞானதீபம் என்ற தனது இதழில் 'கி.பி. முதலாம் நூற்றாண்டில், தோமா அப்போஸ்தலரின் ஊழியத்தின் விளைவால் 30 லட்சம் கிறிஸ்தவர்கள் இந்தியாவில் இருந்ததாகக்' கூறியுள்ளார். இந்த 30 லட்சம் ஆதி இந்தியக் கிறிஸ்தவர்கள் என்ன ஆனார்கள்? அவர்கள் பலுகிப் பெருகியிருந்தால் 90 கோடிக்கும் மேல் வளர்ந்து இந்தியா ஒரு கிறிஸ்தவ நாடு என்றே இன்று அறியப்பட்டிருக்கும்.

ஆதி இந்தியக் கிறிஸ்தவமும் இந்து மதமும்

இந்தச் செய்தி ஒரு பக்கம் இருக்க, ஆய்வடிப்படையிலான மற்றும் பல செய்திகளும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவைகளில் முக்கியமான ஒரு செய்தி என்னவெனில், கடவுட் கோட்பாடற்ற பவுத்த மதமும் சமண மதமும் இந்தியாவில் ஓங்கி நின்ற முதல் நூற்றாண்டில் தோமா கொண்டு வந்த கிறிஸ்தவத்தின் தாக்கத்தால் தமிழகத்தில் உருவாகிய முதல் தமிழ் கிறிஸ்தவ இலக்கியம் திருக்குறள் என்பதாகும். மேலும் கி.பி. 6 ஆம் நூற்றாண்டுகளில் திருக்குறளிலிருந்து, உருவாகிய தமிழ் பக்தி இயக்கம் தான், வைச வைணவ மதங்கள் உள்ளிட்ட, இன்றைய இந்து சமயமாக வளர்ந்துள்ளது என்பதும் விவேகானந்தரின் கூற்றுக்கு வலுவூட்டுகிறது.

ஆழமான ஆய்வுகளின் தேவை

சிந்து என்ற சொல்லின் மருவிய வடிவம் தான் ஹிந்து அல்லது இந்து என்ற சொல். சிந்துவெளி மக்கள் அதாவது, சிந்துக்கள் என்றால் திராவிடர்கள் என்று தான் பொருள். 1794-ம் ஆண்டு வரை இந்து என்ற சொல் எந்த சமயத்தையும் குறிக்கப் பயன்படுத்தப்படவில்லை. ஆங்கிலேய நீதிபதியாயிருந்த சர் வில்லியம் ஜோன்ஸ் என்பவர், இந்தியாவை ஆட்சி செய்ய சட்டம் வகுக்கையில் கொல்கொத்தாவிலுள்ள ஆரியப் பிராமணர்கள் அவரிடம் கொடுத்த மனு தர்ம சாஸ்திரத்துக்கு வில்லியம் ஜோன்ஸ் வழங்கிய பெயர் இந்துச் சட்டம் (Hindu Law) என்பதாகும். அப்படி மனு தர்மத்தை பின்பற்றியவர்களுடைய மதம் சிந்துக்களுடைய அதாவது திராவிடர்களுடையவும் மதமாகத் திணிக்கப்பட்டு, இந்து மதமாக்கப்பட்டது.முன்னாள் காஞ்சி சங்கராச்சாரியார் இந்த உண்மையை ஒத்துக் கொண்டுள்ளார்.

1930 ஆம் ஆண்டு வரை சிந்துவெளி நாகரிகம் பற்றிய அகழ்வாய்வு விவரங்கள் உலகுக்குத் தெரியாதிருந்தது. சிந்துவெளி நாகரீகத்துக்குச் சொந்தக்காரர்கள் திராவிடரே என்ற செய்தி அகில உலக வெள்ளை இன மக்களை பிரமிக்க வைத்துள்ளது. குறிப்பாக, இந்தியாவில் வாழும் ஆரியர்களை அது மிகவும் கலங்க வைத்துக் கொண்டிருக்கிறது.

இந்திய வரலாற்றையே புதுப்பித்தெழுத வேண்டியதின் தேவையும் உணரப்பட்டு வருகிறது. இவ்வாறு, உள்நாட்டு மற்றும் அயல் நாட்டு பல்கலைக் கழகங்களின் பல Ph.D. ஆய்வேடுகள் பல புதிய உண்மைகளை உறுதிப்படுத்தி இந்த ஆய்வுகளைத் தொடருமாறு பரிந்துரைக்கின்றன. ஆதி இந்தியக் கிறிஸ்தவம் பற்றிய உலக மாநாடுகள், 2005ல் நியூயார்க் நகரிலும், 2007 இல் சென்னை நகரிலும் நடந்தன.இந்தக் கருத்துக்கள் அந்த மாநாடுகளில் விவாதிக்கப்பட்டு இவ்வாய்வுகள் தொடர வேண்டுமெனப் பரிந்துரைகள் வழங்கப்பட்டன.

இந்தியச் சமய இலக்கியங்களில் விவிலிய சத்தியங்கள்

கிறிஸ்தவம் ஒரு ஆசிய மதம். இது ஒரு ஐரோப்பிய மதம் என மக்களிடம் தவறாகப் பரப்பப்படுகிறது. இந்தத் தவறு மாற்றப்பட வேண்டும். கிறிஸ்தவம் கி.பி. முதல் நூற்றாண்டிலேயே

இந்தியாவில் வேரூன்றி விட்டது. இன்றைய இந்து மதம் என்றறியப்படும் சைவ - வைணவ மதங்கள் தோமா வழி வந்த ஆதி இந்தியக் கிறிஸ்துவத்தின் கிளைகள் என்ற உண்மை விளங்குவதால் அவை மீதுள்ள வெறுப்பை அகற்றி விட்டு, அந்த மதங்களைச் சார்ந்த மக்களை நம்மால் நேசிக்க உதவுகிறது.

இந்திய மொழிகளுக்கெல்லாம் தாய்மொழி தமிழ் என்றும், சமஸ்கிருத எழுத்துக்கள் தமிழுக்குப் பின், கி.பி.2-ஆம் நூற்றாண்டில் தான் உருவாகியதால் தமிழில் உள்ள சமய இலக்கியங்கள் தான் கடவுள் கோட்பாடுள்ள இந்திய சமயங் களுக்கு ஆதாரம் என்றும் உண்மைகள் வெளிப்படு கின்றன.

திருக்குறளையும், பன்னிரு திருமுறைகள், சிவஞானபோதம், தமிழ் சித்தர் பாடல்கள், போன்ற சைவ சமய இலக்கியங்களையும், நாலாயிரம் திவ்யப் பிரபந்தம் போன்ற வைணவ இலக்கியங்களையும், அவைகளிலிருந்து உருவாகிய சமஸ்கிருத மொழியிலுள்ள வேத நூல்களையும் வேதாந்த நூல்களையும் ஆய்வு செய்து, அவை கூறும் கிறிஸ்தவக் கோட்பாடுகளையும், பைபிளையும் பயன்படுத்தி நற்செய்திப் பணி செய்வது இந்தியாவுக்கு பொருத்தமான ஊழிய வழி முறையாகும் என இன்று பல கிறிஸ்தவ ஆய்வாளர்களும் சுவிஷே ஊழியர்களும் கருதுகின்றனர். இந்தியாவில் ஆதி குடிமக்களாகிய 90 விழுக்காடு அனாரிய மக்களின் விடுதலைக்காக மகாத்மா ஜோதிராவ் புலே,அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், திரு. கன்ஷிராம் போன்றோரின் இயக்கங்கள் வழங்கிய இன விடுதலையும் இயேசு வழங்கிய ஆன்மீக விடுதலையும் இணைந்து செயல்படுவதுதான் இந்தியாவுக்குப் பொருத்தமான ஊழிய வழி முறையாகும்.

இந்தக் கருத்துக்களை இன்னும் ஆழமாக ஆய்வு செய்ய, ஊழிய பாரமுள்ள கிறிஸ்தவ ஆய்வாளர்களை உருவாக்க வாய்ப்பளிக்கும் ஒரு இந்தியக் கிறிஸ்தவப் பல்கலைக் கழகம் நிறுவப்பட வேண்டும். அதற்காக இந்தியன் அனாரிய சமாஜ் ஊழியங்கள் கடந்த பல வருடங்களாக ஜெபித்து வருகிறது. இந்தியக் கிறிஸ்தவர்கள் அனைவரும் இணைந்து அப்படி ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவுவதால் கிறிஸ்தவப் பிரிவுகளின் ஒற்றுமை வளர்வதுடன் புதையுண்டு கிடக்கும் இந்திய வரலாறும், இந்தியக் கிறிஸ்தவமும் குறித்த மாபெரும்

சத்தியங்கள் மேலும் ஆதாரப்பூர்வமாக வெளிவரும். இவ்வாறு ஒரே மேய்ப்பனாகிய இயேசுவின் கீழ் ஒரே மந்தையாக இணைந்து செயல்பட்டு இந்தியாவை இயேசுவுக்குச் சொந்தமாக்க அவர் நம்மை வழிநடத்துவாராக. ஆமென்.

சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது முக்கியம் (மத். 28,20) - 'நாம் போதிக்கிறபடி இந்தியப் பண்பாட்டின் கிறிஸ்தவர்களாக, வாழ்வது அதிலும் முக்கியம்! அப்படி நாம் வாழ்ந்தால் 'இந்தியா கிறிஸ்துவுக்கே!'

இந்த ஊழியம் சார்ந்த எங்கள் பணிகள்

வெள்ளிதோறும் ஜெபம், சபைகளில் சென்று செய்தி வழங்குதல், கருத்தரங்ககள் நடத்துதல், அறைக் கூட்டங்கள் நடத்துதல், ஊழியர் மற்றும் வாலிபர் குழுக்களை சந்தித்து கருத்துப் பரிமாறுதல், நூல்கள் மற்றும் கைப்பிரதிகள் தயாரித்து வெளியிடுதல், ஒலி - ஒளிக் குறுந்தகடுகள் தயாரித்து, வெளியிடுதல், கேபிள் டி.வி.களில் ஒலி - ஒளிபரப்புதல் இணைய தளம் website (iasministries.in), இன்னும் பல.

இணைந்து ஜெபிக்க, நிகழ்வுகளில் பங்குபெற, மற்றும் இயன்ற அளவு தாங்க, அன்புடன் அழைக்கிறோம்!

ஜெபக் குறிப்புகள்

- இந்தியாவிலுள்ள அனைத்துக் கிறிஸ்தவப் பிரிவுகளும் இணைந்து, ஒரு கிறிஸ்தவப் பல்கலைக் கழகம் ஆரம்பித்து, இந்த புதிய உண்மைகளை மேலும் ஆய்வு செய்து ஆதாரப்பூர்வமாக உலகுக்கு வெளிப்படுத்த,
- இதற்கான எளிய நடையிலான பாட நூல்கள், கைப் பிரதிகள், மற்றும் ஒலி ஒளி ஊடகங்கள் உருவாக,
- இந்தக் கருத்துக்களை ஒலி - ஒளி பரப்பும் தொலைக் காட்சி நிலையங்கள் நிறுவப்பட,
- ஆய்வாளர்களும் ஊழியர்களும், குறிப்பாக, வாலிபர் களும், சிறுவர்களும் இவ்வூழியத்தில் ஈடுபட்டு புதுப்பார்வை அடைய,
- இந்தியாவின் தேசிய பாவமான சாதி ஏற்றத்தாழ்வுக் கோட்பாட்டிலிருந்து இந்தியத் திருச்சபையும், ஒட்டு மொத்த இந்தியர்களும் விடுதலை அடைய.

* சபைப் பாகுபாடுகளைக் களைந்து, இந்தியத் திருச்சபை ஒரே மேய்ப்பனாகிய இயேசுவின் கீழ் ஒரே மந்தையாய் செயல்பட.
* கிறிஸ்தவ இறையியல் பாடங்களிலும், கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் இந்த உண்மைகளை கற்றுத்தர ஒழுங்குகள் செய்யப்பட.

தொடர்புக்கு

நிறுவனர்
இந்தியன் அனாரிய சமாஜ் ஊழியங்கள்
22-ஏ, பாற்றிசன் தெரு, ராமவர்மபுரம்,
நாகர்கோயில்- 629 001
கன்னியாகுமரி மாவட்டம். தமிழ்நாடு
தொலைபேசி: 04652 - 235604,
அ.பே. 9442077604, 8903415604
e-mail: sunderyesuvadian@yahoo.com.
website: iasministries.in
நன்கொடை, காணிக்கைஅனுப்ப ஏவப்பட்டால்
Indian Anarya Samaj Trust, Account No. 10843245041
(IFSC SBI No. 000880),
State Bank of India (Distillery Road) Branch, Nagercoil
என்ற முகவரிக்கு அனுப்பி உதவலாம்.

ஆசிரியர் குறித்து

துடிப்பும், வேகமும், விவேகமும், நாவன்மையும் உள்ள இவரைப் பார்த்தால் யாருமே இவருக்கு 71 வயது என்று நம்ப மாட்டார்கள். இந்திய விமானப்படையில் 26 ஆண்டுகள் இந்தியாவின் பல பகுதிகளிலும் பணியாற்றிய பின்பு, பெண்களின் முன்னேற்றத்திற்காக பாடுபடும் ஒரு தொண்டு நிறுவனத்தில் 6 ஆண்டுகள் நிர்வாக அதிகாரியாகவும். பின்னர் பென்னர் இந்தியா கம்பெனியின் டெக்ஸ்டைல் டிவிசனுக்கு பெர்சனல் மேனேஜராகவும் 6 ஆண்டுகள் பணியாற்றியவர். நாடகம், கதாகாலட்சேபம், பல்கலை நிகழ்ச்சிகள், பாட்டு, டிவி சீரியல்கள் என கலைத்துறையில் வெற்றிக் கொடி நாட்டியவர். சினிமா நடிகர் டெல்லி கணேசை முதன் முதலாக டெல்லியில் நாடக மேடையில் அறிமுகப் படுத்தியவர். பியர்லெஸ்ஸில் தன்னுடைய மார்க்கெட்டிங் திறமையால் இன்ஸ்பெக்டர் பதவி வரை உயர்ந்தவர். இப்படி சகலகலா வல்லவரான இவர் ஒரு தீவிர பக்தி வைராக்கியமுள்ள இந்துவாகவும், இயேசு எதிர்ப்பாளராகவும் இருந்தார். தேவன் இவரையும், இவர் குடும்பத்தாரையும் தெரிந்து கொண்ட விதம் மற்றும் இவரின் தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையில் இயேசு கிறிஸ்து செய்த எண்ணி மாளாத அற்புதங்களையும், நன்மைகளையும் சாட்சியாக பல பொதுக் கூட்டங்களிலும் 2500க்கும் மேற்பட்ட திருச்சபைகளிலும் கூறி வருகிறார். இவரின் சாட்சியும், செய்தியும், இவர் எழுதிய சாட்சி புத்தகமும் மற்ற நூல்களும் எப்பேர்ப்பட்ட கடின இருதயத்தையும் உடைப்பதாக, உயிர்ப்பிப்பதாக, அனல் மூட்டுவதாக, சபைகளை பலப்படுத்துவதாக, சபையோரை ஆத்தும ஆதாயம் செய்பவர்களாக மாற்றுகின்றது என்றால் அது மிகையல்ல. கர்த்தர் தமது நாம மகிமைக்கென்று இவரையும், இவரது குடும்பத்தாரையும் விசேஷமாக தெரிந்து கொண்டுள்ளார்.

Sundar Prints 9840199777